Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

64. கீழ்க்காணும் கூற்றுகளுள் சரியானது எது?

1) தூது இலக்கியத்திற்கு வாயில் இலக்கியம், சந்து இலக்கியம் என்ற வேறு பெயர்கள் உண்டு.

2) பெருங்காப்பியத்தின் உறுப்புகள் தூது, குறம் என்பவையே பிற்காலத்தில் தனித்தனி இலக்கிய வகையாக உருவெடுத்தன.

3) தமிழ்விடு தூதின் பாட்டுடைத்தலைவன் மதுரை சொக்கநாதர்.

4) தமிழ்விடு தூது நூலை முதன் முதலில் பதிப்பித்தவர் சி.வை. தாமோதரம் பிள்ளை.

A. 1, 2, 3, 4 B. 2, 3, 4 C. 1, 2, 3 D. 1, 3 E. விடை தெரியவில்லை

65. பொருந்தாத இணையை கண்டறிக.

1) முதல் தூது - தமிழ்விடு தூது

2) தச விடு தூது - மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை

3) தூதின் இலக்கணம் கூறும் நூல் - தொல்காப்பியம்

4) தூதின் பாவகை - கலி வெண்பா

A. 1, 2 B. 2, 3 C. 1, 3 D. இவையனைத்தும் E. விடை தெரியவில்லை

66. பொருத்துக.

a. போலிப் புலவர்களை குட்டுபவர் - 1) வில்லிபுத்தூரார்

b. போலிப் புலவர்களின் தலையை வெட்டுபவர் - 2) அதிவீரராம பாண்டியன்

c. போலிப் புலவர்களின் செவியை அறுப்பவர் - 3) ஒட்டக்கூத்தர்

A. 1 2 3 B. 2 3 1 C. 3 2 1 D. 1 3 2 E. விடை தெரியவில்லை

67. நெறி நான்கனுள் தவறானது (தமிழ்விடு தூது)

A. அறம் B. பாஞ்சாலம் C. கௌடம் D. மாகதம் E. விடை தெரியவில்லை

68. "<u>அரியா சன</u>முனக்கே யானால் உனக்குச்
சரியாரும் உண்டோ தமிழே" என்னும் தமிழ்விடு தூது பாடலில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள்

A. தென்னை B. சிங்காதனம் C. பனை D. மயில் E. விடை தெரியவில்லை

69. பொருத்துக.

a. நெஞ்சு விடு தூது - 1) வெள்ளைவாராணார்

b. காக்கை விடு தூது - 2) உமாபதி சிவாச்சாரியார்

c. வண்டு விடு தூது - 3) கச்சியப்ப முனிவர்

d. அழகர் கிள்ளை விடு தூது - 4) பலபட்டடைச் சொக்கநாதர்

A. 2 1 3 4 B. 1 2 3 4 C. 3 2 1 4 D. 4 3 2 1 E. விடை தெரியவில்லை

70. "வந்து என்றும் சிந்தா மணியாய் இருந்த உனைச்
சிந்துஎன்று சொல்லிய நாச்சிந்துமே" என்ற பாடலடிகள் இடம்பெற்றுள்ள நூல்

A. தென்றல் விடு தூது B. நெஞ்சு விடு தூது C. தமிழ்விடு தூது

D. வண்டு விடு தூது E. விடை தெரியவில்லை

71. கீழ்க்காணும் கூற்றுகளுள் சரியானது எது? (முத்தொள்ளாயிரம்)

1) விருந்து என்னும் வனப்பு வகையைச் சார்ந்த நூல். மேலும் வெண்பாவால் எழுதப்பட்டது.

2) மன்னர்களின் பெயர்களைக் குறிப்பிடாமல் மூவேந்தர்களைப் பற்றி பொதுவாகப் பாடும் நூல்.


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

3) சேரநாட்டை ஏர்க்களச் சிறப்பும், சோழநாட்டை அச்சமில்லாத நாடாகவும் பாண்டிய நாட்டை முத்துடை நாடாகவும் இந்நூல் எடுத்துக்காட்டுகிறது.

4) இந்நூல் முழுமையாக கிடைக்கவில்லை. புறத்திரட்டு வாயிலாக 118 வெண்பாவும் பழைய உரைகளில் 22 வெண்பாக்களும் கிடைத்துள்ளன.

A. அனைத்தும் சரி B. 1, 2 C. 2, 3, 4 D. 1, 3, 4 E. விடை தெரியவில்லை

72. பொருத்துக.

a. மல்லல் - 1) தந்தம்

b. பார்ப்பு - 2) வளமை

c. நந்து - 3) குஞ்சு

d. மருப்பு - 4) சங்கு

A. 1 3 2 4 B. 2 3 4 1 C. 2 1 4 3 D. 1 4 3 2 E. விடை தெரியவில்லை

73. "பல்யானை மன்னீர் படுதிறை தந்துய்ம்மின்
மல்லல் நெடமதில் வாங்குவில் பூட்டுமின்" என்னும் முத்தொள்ளாயிர பாடலடிகளில் குறிப்பிடப்படும் மன்னன் எந்த மரபைச் சேர்ந்தவன்?

A. சேரர் B. சோழன் C. பாண்டியன் D. பல்லவர் E. விடை தெரியவில்லை

74. "வேடத்தால் குறையாது முந்நூல் ஆக
வெஞ்சிலை நாண் மடித்திட்டு விதியாற் கங்கை" என்னும் பாடலடிகள் இடம்பெற்றுள்ள நூல்

A. முத்தொள்ளாயிரம் B. கலிங்கத்துப்பரணி C. முக்கூடற்பள்ளு
D. திருக்குற்றாலக் குறவஞ்சி E. விடை தெரியவில்லை

75. பரணி இலக்கியம் பற்றிய கூற்றுகளுள் தவறானது எது?

A. தமிழில் தோன்றிய முதல் பரணி இலக்கிய நூல் தக்கையாகப் பரணி.

B. பரணியில் போற்றப்படும் தெய்வம் கொற்றவை.

C. பரணி என்னும் நாள்மீனின் பெயராலேயே நூலுக்கும் பரணி என்ற பெயர் வந்தது என்று கூறியவர் - உ.வே.சா

D. முதலாம் குலோத்துங்க சோழனின் படைத்தளபதி வண்டையர் கோன் கலிங்க நாட்டின் மீது படையெடுத்து வெற்றி பெற்றதை சிறப்பிக்கும் வகையில் கலிங்கத்துப்பரணி என்னும் இலக்கியம் உருவாயிற்று.

E. விடை தெரியவில்லை

76. சரியான இணையைக் கண்டறிக.

1) பரணிக்கு இலக்கணம் - பன்னிரு பாட்டியல்

2) எனக்கு விருப்பமான இலக்கியம் கலிங்கத்துப் பரணி - அண்ணா

3) தென்தமிழ் தெய்வப்பரணி - ஒட்டக்கூத்தர்

4) பரணிக்கோர் செயங்கொண்டார் - பலபட்டடைச் சொக்கநாதர்

A. 1, 3 B. 1, 2 C. 3, 4 D. இவையனைத்தும் E. விடை தெரியவில்லை


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

77. பொருத்துக.

a. நவ்வி - 1) சொரிந்து

b. உகு - 2) மான்

c. முழை - 3) காலன்

d. மறலி - 4) மலைக்குகை

A. 3 2 1 4 B. 2 1 4 3 C. 1 2 3 4 D. 1 3 2 4 E. விடை தெரியவில்லை

78. இயற்றமிழின் செழுமையையும் இசைத்தமிழின் இனிமையையும் நாடகத்தமிழின் எழிலினையும் ஒருங்கே கொண்ட முத்தமிழ்க் காவியம்

A. முத்தொள்ளாயிரம் B. குற்றாலக்குறவஞ்சி C. முக்கூடற்பள்ளு

D. இராசராச சோழனுலா E. விடை தெரியவில்லை

79. கட்டினும் கழங்கினும் என்னும் தொல்காப்பிய நூற்பா அடிப்படையில் தோன்றிய நூல்

A. நந்திக் கலம்பகம் B. காவடிச்சிந்து C. முத்தொள்ளாயிரம்

D. குற்றாலக் குறவஞ்சி E. விடை தெரியவில்லை

80. சரியான கூற்றினை காண்க.

1) முல்லை நில மக்களான குறவர்களின் வாழ்க்கையைக் காட்டும் சிற்றிலக்கியம் குறவஞ்சி.

2) பாட்டுடைத்தலைவன் உலா செல்லும் போது காதல் கொண்டு காமநோயால் தவிக்கும் தலைவிக்கு குறமகள் குறி சொல்வதாக அமைவது குறவஞ்சி இலக்கியம்.

3) திருக்குற்றாலக் குறவஞ்சியின் ஆசிரியர் திரிகூடராசப்ப கவிராயர் - இவரின் காலம் 18 ஆம் நூற்றாண்டு.

A. 2, 3 B. 1, 2 C. 1, 2, 3 D. 1, 3 E. விடை தெரியவில்லை

## மனோன்மணியம், பாஞ்சாலி சபதம், குயில்பாட்டு

81. மனோன்மணியம் பற்றிய கூற்றுகளுள் சரியானது எது/எவை?

1) இந்நூல் கவிதை வடிவிலான நாடக நூல்.

2) 5 அங்கங்களையும் 20 காட்சிகளையும் உள்ளடக்கிய நூல்.

3) இந்நூலின் இடையே வாணி யாழிசைத்து பாடும் பாடல்கள் பற்றிய சிவகாமி சபதம் என்னும் துணைக்கதை ஒன்றும் இடம் பெற்றுள்ளது.

4) தமிழில் உள்ள முழுமையான முதல் நாடக நூல் இதுவே.

A. அனைத்தும் சரி B. 2, 3, 4 C. 1, 4 D. 1, 2, 4 E. விடை தெரியவில்லை

82. பொருத்துக.

a. அயம் - 1) பாய்

b. பரல் - 2) குதிரை

c. சாடு - 3) கல்

d. திருந்தலீர் - 4) பகைவர்

A. 3 4 2 1 B. 2 3 1 4 C. 1 2 4 3 D. 3 2 1 4 E. விடை தெரியவில்லை

83. மனோன்மணியம் பெ. சுந்தரனார் பற்றிய கூற்றுகளுள் பொருந்தாதது எது?

1) இவரைப் பற்றி கா.சு. பிள்ளை “தமிழ் இலக்கியத்தில் கால ஆராய்ச்சியைத் தொடங்கி வைத்த பெருமை


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

இவருடையதே" என்று கூறினார்.

2) சென்னை மாகாண அரசு இவருக்கு ராவ் பகதூர் பட்டத்தை வழங்கி சிறப்பித்தது.

3) இவர் இயற்றிய "நீராருங் கடலுடுத்த" என்ற தமிழ் வாழ்த்துப் பாடலே தமிழக அரசின் தமிழ்த்தாய் வாழ்த்தாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் இப்பாடல் பஃறொழிசைக் கொச்சகக் கலிப்பாவால் ஆனது.

A. 1, 2 B. 2, 3 C. 3 D. எதுவுமில்லை E. விடை தெரியவில்லை

84. பாஞ்சாலி சபதத்தில் உள்ள சருக்கங்களின் எண்ணிக்கை

A. பத்து B. ஐந்து C. இருபது D. பதினைந்து E. விடை தெரியவில்லை

85. "நல்லதோர் நுந்தை எனவுரை செய்வாய்" யார் யாரிடம் கூறிய கூற்று?

A. துரியோதனன் சகுனியிடம் B. துரியோதனன் விதுரனிடம் C. திருதராட்டிரன் விதுரனிடம்

D. திருதராட்டிரன் சகுனியிடம் E. விடை தெரியவில்லை

86. "பாரதர்தந் நாட்டிலே நாசா மெய்தப்
பாவியேன் துணைபுரியும் பான்மை யென்னே!" இது யாரின் கூற்று?

A. திருதராட்டிரன் B. துரியோதனன் C. சகுனி D. விதுரன்

E. விடை தெரியவில்லை

87. பாரதியார் பற்றிய கூற்றுகளுள் சரியானது?

1) பாஞ்சாலி சபதத்தின் முதல் பாகம் 1912 ஆம் ஆண்டிலும் இரண்டாம் பாகம் 1924 ஆம் ஆண்டிலும் வெளியிடப்பட்டது.

2) இவரின் முப்பெரும் படைப்புகள் : கண்ணன்பாட்டு, ஞானரதம், பாஞ்சாலி சபதம்.

3) வியாசரின் மகாபாரதத்தைத் தழுவி பாரதியாரால் எழுதப்பட்ட காப்பியம் பாஞ்சாலி சபதம்.

A. 1, 2, 3 B. 2, 3 C. 1, 3 D. 3 மட்டும் E. விடை தெரியவில்லை

88. பொருந்தாத இணையைக் கண்டறிக.

A. வீறு - வலிமை

B. அரம்பையர் - அரக்கர்கள்

C. பண்ணவர் - தேவர்

D. குலவு - விளங்கும்

E. விடை தெரியவில்லை

89. காளமேகப் புலவர் இயற்றிய நூல்களுள் சரியானது

A. சித்திரமடல் B. நூல்தொகை விளக்கம் C. தராசு D. காந்தியம்மை பிள்ளைத்தமிழ்

E. விடை தெரியவில்லை

90. கீழ்க்காணும் கூற்றுகளுள் சரியானது?

1) குதிரையையும் காவிரியையும் ஒன்றாக ஒப்பனை செய்து பாடியவர் - வரதன்.

2) இராமநாதபுரம் மன்னர் பொன்னுச்சாமி வேண்டுதலுக்கு இணங்க சந்திரசேகர கவிராசப் பண்டிதர் தொகுத்த நூல் தனிப்பாடல் திரட்டு.

3) காளமேகப் புலவர் திருவரங்க மடப்பள்ளியில் பணிபுரிந்து சிலகாலம் கழித்து வைணவத்திலிருந்து சைவ சமயத்திற்கு மாறினார்.


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

4) தனிப்பாடல் திரட்டில் 110 புலவர்கள் பாடிய 1113 பாடல்கள் உள்ளன.

5) "மரமும் பழைய குடையும்" என்ற சிலேடை பாடலை இயற்றியவர் அழகிய சொக்கநாதப் புலவர்.

A. 2, 4, 5 B. 1, 2, 3 C. 3, 4, 5 D. அனைத்தும் சரி

E. விடை தெரியவில்லை

91. பொருத்தமான இணையைத் தேர்ந்தெடு.

1) தத்துவ படைப்பு - குயில்பாட்டு

2) மகாகவி பட்டம் - வ.ரா.

3) பாட்டுக்கொரு புவலன் பாரதி - பாரதிதாசன்

4) வந்தேமாதரம் மொழிபெயர்ப்பு - பாரதியார்

5) திருவிதாங்கூர்ப் பண்டை மன்னர் கால ஆராய்ச்சி - P. சுந்தரனார்

A. 1, 2, 3 B. 3, 4, 5 C. 1, 2, 4, 5 D. இவையனைத்தும்

E. விடை தெரியவில்லை

92. பாரதியாரின் "தனிமை இரக்கம்" பாடல் முதன்முதலாக வெளிவந்த இதழ்

A. சுதேச மித்ரன் B. இந்தியா C. விவேகபானு D. சக்ரவர்த்தினி

E. விடை தெரியவில்லை

93. சரியான கூற்றினைக் கண்டறிக.

1) பாரதியின் உரைநடைநூல்களுள் ஒன்று ஆறில் ஒரு பங்கு.

2) "பாரதியார் ஒரு அவதாரப் புருஷர். இவர் நூலைத் தமிழர் வேதமாகக் கொள்வார்களாக" - பரலி சு. நெல்லையப்பர்.

3) பாரதியின் புதுக்கவிதைக்கு முன்னோடியாக இருந்தவர் வால்ட்விட்மன்.

4) பாரதியின் புனைப்பெயர்களுள் ஒன்று சாவித்ரி.

A. 2, 3, 4 B. 1, 2, 3 C. 3, 4 D. இவையனைத்தும்

E. விடை தெரியவில்லை

## நாட்டுப்புறப் பாடல்கள், சித்தர் பாடல்கள்

94. பொருத்துக.

| சித்தர்கள் | அடக்கம் பெற்ற தலங்கள் |
|---|---|
| a. அகத்தியர் | 1) திருவண்ணாமலை |
| b. குதம்பைச் சித்தர் | 2) விருத்தாச்சலம் |
| c. இடைக்காட்டு சித்தர் | 3) அனந்த சயனம் |
| d. பாம்பாட்டிச் சித்தர் | 4) மாயூரம் |

A. 3 4 1 2 B. 2 3 4 1 C. 1 2 3 4 D. 4 3 2 1 E. விடை தெரியவில்லை

95. உருவ வழிபாடு செய்யாமல் வெட்டவெளியையே கடவுளாக வழிபட்டவர்

A. பாம்பாட்டிச் சித்தர் B. அழுகுணிச் சித்தர் C. குதம்பைச் சித்தர்

D. கடுவெளிச் சித்தர் E. விடை தெரியவில்லை


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No. 7358965593

96. சித்தர்கள் தொடர்பான கூற்றுகளுள் சரியானது எது?

1) தொல்காப்பியத்திலும் திருக்குறளிலும் காணப்படும் "சித்தன்" என்னும் சொல்லுக்கும் சிலப்பதிகாரத்தில் நாடுகாண் காதையில் இடம்பெறும் "நிறைமொழி மாந்தர்" என்னும் சொல்லுக்கும் உரியவர்கள் சித்தர்கள்.
2) சித்தர்களின் ஆதி சித்தராக கருதப்படுபவர் அகத்தியர்.
3) அறிவு வேறு, ஞானம் வேறு என்று உலகிற்கு விளக்கியவர்கள் சித்தர்கள்.
4) "கடவுளைக் காண முயல்பவர்கள் பக்தர்கள், கண்டு தெளிந்தவர்கள் சித்தர்கள்" என்று தேவாரம் கூறுகிறது.

A. 2, 3, 4 B. 1, 3, 4 C. 3, 4 D. இவையனைத்தும்
E. விடை தெரியவில்லை

97. பின்வரும் கூற்றுகளுள் தவறானது எது?

1) "சாதிப்பிரிவினிலே தீயை மூட்டுவோம்" என்று கூறியவர் சிவவாக்கியார்.
2) "சாதிபேதம் ஓதுகின்ற தன்மை என்ன தன்மையோ?" என்று கூறியவர் பாம்பாட்டிச் சித்தர்.
3) சித்தர்களைக் "கிளர்ச்சியாளர்கள்" என்று கூறியவர் அறிஞர் க. கைலாசபதி.
4) "ஒன்றென்றிரு, தெய்வம் உண்டென்றிரு" என்று பாடியவர் பத்ரகிரியார்.

A. 1, 2 B. 2, 3, 4 C. 3, 4 D. 1, 2, 4 E. விடை தெரியவில்லை

98. நாட்டுப்புற பாடல்கள் தொடர்பான கூற்றுகளுள் சரியானது?

1) தமிழ் நாட்டுப்புறப் பாடலை முதன் முதலில் மு. அருணாசலம் அவர்கள் 1943ல் "காற்றில் மிதந்த கவிதை" என்ற பெயரில் வெளியிட்டார்.
2) தொல்காப்பியர் நாட்டுப்புறப் பாடல்களை பண்ணத்தி என்று குறிப்பிட்டுள்ளார்.
3) தமிழக நாட்டுப்புறவியலின் தந்தை என அழைக்கப்படுபவர் நா. வானமாமலை.
4) சே. அன்னக்காமு, சி.வ. ஜெகநாதன், நா. வானமாமலை ஆகியோர் நாட்டுப்புற இலக்கிய மும்மணிகள் என்றழைக்கப்படுகின்றனர்.

A. 1, 2, 4 B. 2, 3, 4 C. 1, 2 D. இவையனைத்தும்
E. விடை தெரியவில்லை

99. தவறான இணையைக் கண்டறிக.

1) பரந்த கடல் - பள்ளிக்கூடம்
2) கடல் அலை - பஞ்சுமெத்தை
3) இடிமின்னல் - விளக்கு
4) கட்டு மரம் - வாழும் வீடு

A. 2, 3, 4 B. 1, 2 C. 1, 2, 4 D. 2, 3 E. விடை தெரியவில்லை

100. "ஆரலைந் தாலும் நீயலையாதேடி
ஊரலைந் தாலும் ஒன்றையும் நாடாதே" என அறிவுறுத்தியவர்

A. கடுவெளிச் சித்தர் B. குதம்பைச் சித்தர் C. அகப்பேய் சித்தர் D. திருமூலர்
E. விடை தெரியவில்லை

101. பட்டினத்தாரால் சம்சாரி என்று கூறப்பட்டவர்

A. பத்திரகிரியார் B. பாம்பாட்டி சித்தர் C. சிவவாக்கியர் D. திருமூலர்


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

E. விடை தெரியவில்லை

102. பொருத்துக.

a. நிலையாமையினை உணர்ந்த யோகி - 1) அகத்தியர்

b. யோக சித்தர் - 2) போகர்

c. நாத முனி - 3) பட்டினத்தார்

d. காலங்கி நாதரின் மாணவர் - 4) சிவவாக்கியார்

A. 1 2 3 4 B. 3 4 1 2 C. 2 3 1 4 D. 4 3 2 1 E. விடை தெரியவில்லை

103. 1) இவரின் பாடல்கள் வினாவிடையாகச் செல்லும்.

2) ஞானரத்தினக் குறவஞ்சி என்னும் பாடலை பாடியுள்ளார்.

3) சிங்கன் கேள்வி கேட்பதாகவும் சிங்கி பதில் சொல்வதாகவும் பாடல்கள் அமைந்திருக்கும்.

மேற்காணும் கூற்றுகளுடன் தொடர்புடையவர் யார்?

A. சட்டை முனி B. கொங்கணச் சித்தர் C. அழுகுணிச் சித்தர் D. பீர் முகம்மது

E. விடை தெரியவில்லை

104. "தன்னையறிந்து இன்பமுற வெண்ணிலாவே! ஒரு

தந்திரம் நீ சொல்ல வேண்டும் வெண்ணிலாவே!

நாதர்முடி மேலிருக்கும் வெண்ணிலாவே! என்ற பாடலடிகளை இயற்றியவர்

A. அப்பர் B. திருஞானசம்பந்தர் C. வள்ளலார் D. பட்டினத்தார்

E. விடை தெரியவில்லை

**பெரியபுராணம், நாலாயிரதிவ்ய பிரபந்தம், திருவிளையாடற் புராணம், சீறாப்புராணம், தேம்பாவணி**

105. கந்தபுராணத்தின் ஒரு பகுதியான ஆலாசிய மான்மியத்தை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்பட்ட நூல்

A. பெரியபுராணம் B. நாலாயிர திவ்ய பிரபந்தம் C. திருவிளையாடற் புராணம்

D. மதுரை பதிற்றுப்பத்து அந்தாதி E. விடை தெரியவில்லை

106. தவறான இணையைக் கண்டறிக.

1) நீபவனம் - சினம்

2) கவரி - சாமரை

3) தார் - மாலை

4) கேள்வியினான் - நூல் வல்லான்

A. 1, 4 B. 3 மட்டும் C. 1 மட்டும் D. 3, 4 E. விடை தெரியவில்லை

107. "என்னை இகழ்ந்தனனோ சொல் வடிவாய் நின்இடம் பிரியா இமையப் பாவை

தன்னையும் சொல் பொருளான உன்னையுமே இகழ்ந்தனன்"

இது யார் யாரிடம் கூறிய கூற்று?

A. தருமி சிவபெருமானிடம் B. இடைக்காடனார் சிவபெருமானிடம்

C. பரஞ்சோதி முனிவர் சொக்கர் சோமசுந்தர பெருமாளிடம் D. சேக்கிழார் திருமாலிடம்

E. விடை தெரியவில்லை


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

108. “மாசற விசித்த வார்புறு வள்பின் ..........” இது யார் யாரிடம் கூறியது?

A. ஔவையார் அதியமானிடம்

B. மோசிகீரனார் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையிடம்

C. தருமி செண்பக பாண்டியனிடம்

D. நக்கீரர் செண்பக பாண்டியனிடம்

E. விடை தெரியவில்லை

109. கீழ்க்காணும் கூற்றுகளுள் சரியானது?

1) இறைவனின் திருவிளையாடல்களைப் பற்றி முதன்முதலில் கூறிய நூல் கல்லாடம் சுந்தரபாண்டியம்.

2) தொடைநயமும் பக்கதிச்சுவையும் மிக்க இந்நூலுக்கு உரை எழுதியவர் பண்டிதமணி ந.மு.வேங்கடசாமி நாட்டார்.

3) முதன் முதலில் திருவிளையாடற் புராணம் பாடியவர் பெரும்பற்றப் புலியூர் நம்பி.

4) பரஞ்சோதியின் திருவிளையாடற்புராணம் 3 காண்டங்கள், 64 படலங்கள், 3363 பாடல்களைக் கொண்டது.

A. அனைத்தும் சரி B. 1, 2, 4 C. 1, 2 D. 2, 4 E. விடை தெரியவில்லை

110. “ஆரவை குறுகி நேர்நின் றங்கிருந் தவரை நோக்கி
யாரைநம் கவிக்குக் குற்றம் இயம்பினார்” இது யாரின் கூற்று?

A. நக்கீரர் B. சிவபெருமான் C. தருமி D. செண்பக பாண்டியன்

E. விடை தெரியவில்லை

111. பெரியபுராணம் பற்றிய கூற்றுகளுள் தவறானது எது?

1) 63 தனியடியார்கள் மற்றும் 9 தொகையடியார்கள் ஆகியோரின் வரலாற்றை கூறுவதால் பெருமை பெற்ற புராணம் என்னும் பொருளில் பெரியபுராணம் என்னும பெயர் பெற்றது.

2) பெரியபுராணத்தை இயற்றிய சேக்கிழார் கி.பி. 12ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். சோழ அரசன் முதலாம் குலோத்துங்கன் அவையில் அமைச்சராக பணியாற்றியவர்.

3) இந்நூல் 2 காண்டங்களையும், 13 சருக்கங்களையும் 4286 பாடல்களையும் கொண்டது.

4) தமிழில் தோன்றிய முதல் தேசிய காப்பியம் இதுவே.

5) “உலகம், உயிர், கடவுள் இவை மூன்றையும் ஒருங்கே காட்டும் காவியம் தான் பெரியபுராணம்” என திரு.வி.க கூறுகிறார்.

A. 1, 2 B. 4, 5 C. 1, 2, 3 D. 2, 4 E. விடை தெரியவில்லை

112. கூற்று : பெரிய புராணம் பிள்ளை பாதி புராணம் பாதி என்று சிறப்பித்து அழைக்கப்படுகிறது.
காரணம் : திருஞானசம்பந்தரின் வரலாற்றை மட்டும் 1256 பாடல்களில் கூறுகிறது.

A. கூற்று சரி காணரம் தவறு B. கூற்று தவறு காரணம் சரி C. கூற்று சரி காரணம் சரி

D. கூற்று தவறு காரணம் தவறு E. விடை தெரியவில்லை

113. தவறான இணையைக் கண்டறிக.

A. திருத்தொண்டர் மாக்கதை - சுந்தரர்

B. திருத்தொண்டர் திருவந்தாதி - நம்பியாண்டார் நம்பி

C. சேக்கிழார் புராணம் - உமாபதி சிவாச்சாரியார்

D. சேக்கிழார் பிள்ளைத்தமிழ் - மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

E. விடை தெரியவில்லை

114. பெரியபுராணம் தரும் செய்திகளில் சரியானவை எவை?

1) 63 நாயன்மார்களில் காரைக்கால் அம்மையார், இசைஞானியார் (ம) மங்கையர்க்கரசியார் ஆகியோர் பெண்கள்.

2) முதுமை வேண்டிப் பெற்று கைலாயம் சென்றவர் காரைக்கால் அம்மையார்.

3) விதைத்த நெல்லை எடுத்துச் சமைத்து சிவனடியார்க்கு உணவு படையத்தவர் இளையான்குடி நாயனார்.

4) பிள்ளைக்கறி சமைத்து படைத்தவர் சிறுதொண்டர்.

A. 1, 2, 3 B. 2, 4 C. 1, 2 D. இவையனைத்தும் E. விடை தெரியவில்லை

115. "கோடெல்லாம் மட அன்னம் குளமெல்லாம் கடல் அன்ன
நாடெல்லாம் நீர்நாடு தனைஒவ்வா நலமெல்லாம்" எனும் பாடலில் எந்த நாட்டின் செழிப்புக்கு பிற நாடுகள் ஈடாகாது?

A. சோழநாடு B. பாண்டியநாடு C. சேரநாடு D. கலிங்கநாடு

E. விடை தெரியவில்லை

116. பொருத்துக.

a. மாடு - 1) எருமைக்கடா

b. கோடு - 2) பச்சிலை மரம்

c. பகடு - 3) பக்கம்

d. தமாலம் - 4) குளக்கரை

A. 3 2 1 4 B. 1 4 3 2 C. 1 2 3 4 D. 3 4 1 2 E. விடை தெரியவில்லை

117. தேனினும் இனி தீந்தமிழ் பனுவல் என்றழைக்கப்படும் நூல்

A. பெரியபுராணம் B. நாலாயிர திவ்ய பிரபந்தம் C. சேக்கிழார் பிள்ளைத்தமிழ்

D. திருவிளையாடற்புராணம் E. விடை தெரியவில்லை

118. நாலாயிர திவ்ய பிரபந்தம் பற்றிய கூற்றுகளுள் சரியானது?

1) அருந்தமிழ் பனுவல் என்றழைக்கப்படும் நாலாயிர திவ்ய பிரபந்தத்தின் சிறப்புப் பெயர் திராவிட சாகரம்.

2) இதனை தொகுத்தவர் நம்பியாண்டார் நம்பி.

3) இதில் 105 பாசுரங்கள் மற்றும் 3776 பாடல்கள் உள்ளன.

4) நம்மாழ்வார் திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி மற்றும் பெருமாள் திருமொழி ஆகிய நூல்களை இயற்றியுள்ளார்.

A. 1, 2, 3 B. 1, 3 C. 1, 2, 4 D. இவையனைத்தும்

E. விடை தெரியவில்லை

119. சரியான இணையைத் தேர்ந்தெடு.

1) பெரிய திருமொழி - திருமங்கை ஆழ்வார் பாடல்கள்

2) திருவாய் மொழி - நம்மாழ்வார் பாடல்கள்

3) முதல் ஆயிரத்தில் ஒன்று - பெருமாள் திருமொழி

A. அனைத்தும் சரி B. 1, 2 C. 1, 3 D. 2, 3 E. விடை தெரியவில்லை


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

120. "மீன்நோக்கும் நீள்வயல் சூழ் வித்துவக்கோட் டம்மாஎன்
பானோக்கா யாகிலுமுன் பற்றல்லால் பற்றில்லேன்" என்னும் பாடலடிகளை இயற்றியவர்

A. பொய்கை ஆழ்வார் B. பூதத்தாழ்வார் C. பேயாழ்வார் D. குலசேகர ஆழ்வார்
E. விடை தெரியவில்லை

121. "மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைத்தாமம் நிரைதாழ்ந்த பந்தற்கீழ்" எனும் பாடலடிகள் இடம்பெற்றுள்ள நூல்

A. திருப்பாவை B. பெருமாள் திருமொழி C. நாச்சியார் திருமொழி
D. பெரிய திருமொழி E. விடை தெரியவில்லை

122. பொருத்துக.

a. அன்பு - 1) நெய்
b. ஆர்வம் - 2) விளக்கு
c. சிந்தை - 3) இடுதிரி
d. ஞானம் - 4) சுடர்விளக்கு

A. 2 3 1 4 B. 1 2 3 4 C. 3 2 1 4 D. 2 1 3 4 E. விடை தெரியவில்லை

123. பாஞ்ச சன்யம் என்னும் சங்கின் அம்சமாக கருதப்படுபவர்

A. நம்மாழ்வார் B. பொய்கையாழ்வார் C. பூதத்தாழ்வார் D. பேயாழ்வார்
E. விடை தெரியவில்லை

124. நாராயணனைப் பாடும் வாயால் நரனைப் பாடேன் என்று கூறியவர்

A. பேயாழ்வார் B. நம்மாழ்வார் C. மதுரகவி ஆழ்வார் D. திருமழிசையாழ்வார்
E. விடை தெரியவில்லை

125. தேம்பாவணி தொடர்பான கூற்றுகளுள் தவறானது?

1) தேம்பாவணி (ம) திருக்காவலூர் கலம்பகம் கதம்பமாலையாக காட்சியளிக்கிறது என்று கூறியவர் இரா.பி. சேதுப்பிள்ளை.
2) இந்நூல் 3 காண்டம், 36 படலம், 3615 பாடல்களை கொண்டுள்ளது.
3) கிறித்துவ சமயத்தின் கலைக்களஞ்சியம் என்று இந்நூல் சிறப்பிக்கப்படுகிறது.
4) கிறித்துவின் வளர்ப்பு தந்தையாகிய சூசையப்பர் என்னும் யோசேப்பினை பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்ட நூல் தேம்பாவணி.

A. 1, 2, 4 B. 2, 3, 4 C. 1, 2, 3 D. 1, 2, 3, 4 E. விடை தெரியவில்லை

126. 1) இஸ்மத் சன்னியாசி என்னும் பட்டத்தை வீரமாமுனிவருக்கு கொடுத்தவர் திருச்சியை ஆண்ட மன்னர் சந்தாசாகிப்.
2) தமிழின் முதல் அகராதி சதுரகராதியை இயற்றியவர் வீரமாமுனிவர்.
3) இவரின் நகைச்சுவை சார்ந்த படைப்பு தொன்னூல் விளக்கம்.
மேற்கூறியவற்றுள் தவறானது எது?

A. 1 B. 2 C. 3 D. எதுவுமில்லை E. விடை தெரியவில்லை


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No. 7358965593

127. பொருத்தமான இணையை தேர்ந்தெடு.

A. புழை - கட்டி

B. பிணித்து - உடல்

C. சேக்கை - படுக்கை

D. யாக்கை - துளை

E. விடை தெரியவில்லை

128. கிறித்துவிற்கு முன்தோன்றி அவரின் வருகையை அறிவித்த முன்னோடி

A. கருணையன் B. அருளப்பன் C. வளன் D. A & B E. விடை தெரியவில்லை

129. மக்கத்தை விட்டு பெருமகனார் மதீனம் செல்லுதலை விவரிக்கும் காண்டம்

A. விலாதத்து காண்டம் B. செலவியற் காண்டம் C. செம்பொருட்காண்டம்

D. பிறப்பியர் காண்டம் E. விடை தெரியவில்லை

130. சீறாப்புராணம் தொடர்பான கூற்றுகளுள் தவறானது எது?

1) சின்னசீறாவை இயற்றியவர் பனு அகமது மரைக்காயர். இந்நூல் 39 படலங்கள், 1829 விருத்தங்கள், 2145 பாடல்களை உள்ளடக்கியது.

2) உமறுப்புலவரை ஆதரித்த வள்ளல் அப்துல் காதிர் மரைக்காயர்.

3) இஸ்லாமிய கம்பர் என்று அழைக்கப்படுபவர் உமறுப்புலவர்.

A. 1, 2 B. 2, 3 C. 1, 2, 3 D. எதுவுமில்லை E. விடை தெரியவில்லை

131. மடங்கல் என்னும் சொல்லின் பொருள்

A. தந்தம் B. புலி C. கரடி D. சிங்கம் E. விடை தெரியவில்லை

132. பொருந்தாத இணையைக் கண்டறிக.

A. கேழல் - நட்பு

B. மரை - மான்

C. புயம் - தோள்

D. பூதரம் - மலை

E. விடை தெரியவில்லை

133. "இன்று தொட்டிவண் நெறியினில் உயிர்செகுத் திடுவ
தன்று வேறொரு காட்டினிற் புகுகவென் ................"
இது யாருடைய கூற்று

A. முகமது நபி B. இயேசு பெருமான் C. திருமால் D. சிவன்

E. விடை தெரியவில்லை

134. பொருத்தமான இணையைக் கண்டறிக.

1) உரகம் - பாம்பு

2) முழை - குகை

3) புதியன் - இறைவன்

4) கோடிகம் - ஆடை

A. 2, 4 B. 3, 4 C. 2, 3 D. இவையனைத்தும் E. விடை தெரியவில்லை

padasalai.Net


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

135. “தீன் எனுஞ் செல்வமே பழுத்த சேணகா்” என்ற பாடலடிகள் இடம்பெற்றுள்ள நூல்

A. திருச்சாழல் B. தேம்பாவணி C. சீறாப்புராணம் D. திருவாய்மொழி

E. விடை தெரியவில்லை

**ஐம்பெருங்காப்பியங்கள், ஐஞ்சிறுங்காப்பியங்கள்**

136. கீழ்க்கண்ட கூற்றுகளுள் சரியானது எது?

1) ஐம்பெருங்காப்பியங்கள் என்ற தொடரை முதன்முதலில் கூறியவா் மயிலைநாதா்.

2) மணிமேகலை, குண்டலகேசி என்ற இரண்டும் பௌத்த காப்பியங்கள்.

3) ஐஞ்சிறுங்காப்பியங்கள் அனைத்தும் சமணக் காப்பியங்கள்.

4) குண்டலகேசிக்கு எதிராக இயற்றப்பட்டது நீலகேசி.

5) அறம், பொருள், இன்பம், வீடு என்ற நாற்பொருளையும் கூறுவது சிறுகாப்பியம்.

A. அனைத்தும் சரி B. 1, 2, 3 C. 2, 3, 4 D. 1, 2, 3, 4

E. விடை தெரியவில்லை

137. சிலப்பதிகாரம் தொடா்பான கூற்றுகளுள் சரியானது எது?

1) உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள், முதற்காப்பியம், ஒற்றுமை காப்பியம், நாடகக் காப்பியம் என்பவை சிலப்பதிகாரத்தின் சிறப்புப் பெயா்கள்.

2) இளங்கோவடிகள் துறவுபூண்டு அமா்ந்த இடம் குடவாயிற்கோட்டம்.

3) சிலப்பதிகாரம் ஆசிரியப்பாவாலும் கொச்சக கலிப்பாவாலும் ஆனது.

4) “முதன் முதலாகத் தமிழ் மக்கள் எல்லோரையும் ஒருங்கே காணும் நெறியில் நின்று நூல் செய்தவா் இளங்கோவடிகள்” என்று கூறியவா் மு. வரதராசனாா்.

A. 1, 2, 4 B. 2, 3 C. 1, 4 D. அனைத்தும் சரி E. விடை தெரியவில்லை

138. சரியான இணையைத் தோ்ந்தெடு.

1) கண்ணகியின் தோழி - தேவந்தி

2) மாதவியின் தோழி - வயந்த மாலை

3) பெண் சமணத்துறவி - கவுந்தியடிகள்

A. 1, 3 B. 2, 3 C. 1, 2, 3 D. எதுவுமில்லை E. விடை தெரியவில்லை

139. “ஓவிய விதானத்து உரைபெறு நித்திலத்து
மாலைத் தாமம் வளையுடன் நாற்றி” என்னும் சிலப்பதிகார பாடலடிகள் எதனை குறிப்பிடுகிறது?

A. மாதவியின் நாட்டியப் பயிற்சி B. மாதவி மன்னனிடம் பரிசு பெறுதல்

C. நாட்டிய அரங்கின் அமைப்பு D. எதுவுமில்லை E. விடை தெரியவில்லை

140. பொருத்துக.

a. நித்திலம் - 1) சாம்பூநதம் என்னும் உயா்ந்தவகைப் பொன்

b. பழுது - 2) கற்பு

c. நாவலம் பொலம் - 3) முத்து

d. நிறை - 4) உடல்

A. 3 1 4 2 B. 1 4 3 2 C. 3 4 1 2 D. 4 1 3 2 E. விடை தெரியவில்லை


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

141. கீழ்க்காணும் கூற்றுகளுள் சரியானது எது?

1) சிலப்பதிகாரத்தின் பழைய உரையாசிரியர்கள் இருவர். ஒருவர் அரும்பதங்களுக்கு மட்டும் உரைவழங்கிய அரும்பத உரைகாரர். மற்றொருவர் விளக்கமாக உரை எழுதிய அடியார்க்கு நல்லார்.

2) சிலப்பதிகார நூல் முழுமைக்கும் உரை எழுதியவர் ந.மு. வேங்கடசாமி நாட்டார்.

3) "சேரன் தம்பி சிலம்பை இசைத்ததும்" என்று இளங்கோடிவகளைப் பற்றி குறிப்பிடுபவர் பாரதிதாசன்.

4) "நெஞ்சையள்ளும் சிலம்பு", "தேனிலே ஊறிய செந்தமிழின் சுவை தோறும் சிலப்பதிகாரம்" எனப் பாராட்டியவர் பாரதியார்.

A. 2, 3, 4 B. 3, 4 C. 1, 2 D. இவையனைத்தும் E. விடை தெரியவில்லை

142. தவறான கூற்று எது?

1) "முடிகெழு வேந்தர் மூவர்க்கும் உரியது; அடிகள் நீரே அருளுக" என்று கூறியவர் திருத்தக்க தேவர்.

2) "நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்" என்று கூறியவர் இளங்கோவடிகள்.

3) மன்னனைத் தலைவனாகக் கொள்ளாமல் மக்களை தலைமையாக கொண்டு இயற்றப்பட்ட நூல் சிலப்பதிகாரம்.

A. 1 B. 2 C. 3 D. இவையனைத்தும் E. விடை தெரியவில்லை

143. 1) "பேருரங் கிழித்த பெண்ணு மல்லள், செற்றனள் போலும்" என்னும் பாடலடிகள் இடம்பெற்றுள்ள நூல் மணிமேகலை.

2) மணிமேகலை 30 காதைகள் 4755 அடிகள் உடைய காப்பியம்.

3) மணிமேகலை தமிழின் முதல் சமயக் காப்பியம்.

4) மணிமேகலையில் நாவலந்தீவு என குறிப்பிடப்படும் நாடு இலங்கை.

மேற்கூறியவற்றில் தவறானது எது?

A. 2, 3 B. 1, 4 C. 4 மட்டும் D. இவையனைத்தும் E. விடை தெரியவில்லை

144. 1) சமய பூசலுக்காக வித்திட்ட தமிழின் இரண்டாவது காப்பிய நூல் மணிமேகலை.

2) அறவணடிகளின் அறிவுரைப்படி ஆதிரையிடம் முதன்முதலில் அமுதசுரபியில் பிச்சை பெற்றவள் மணிமேகலை.

3) உடலில் தோன்றும் தீவினையாக மணிமேகலை குறிப்பிடுவது கொலை, களவு (ம) காமம்.

மேற்கூறியவற்றுள் சரியான கூற்று எது?

A. 1, 2 B. 2, 3 C. 1, 3 D. 1, 2, 3 E. விடை தெரியவில்லை

145. பொருத்துக.

a. விலோதம் - 1) துணியாலான கொடி

b. வசி - 2) மழை

c. வேதிகை - 3) குற்றம்

d. தோம் - 4) திண்ணை

A. 4 1 3 2 B. 1 2 3 4 C. 2 3 1 4 D. 1 2 4 3 E. விடை தெரியவில்லை

146. பொருந்தாத இணையைத் தேர்ந்தெடு.

A. குறளை - புறம்பேசுதல்

B. வெ∴கல் - பெருவிருப்பம்


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

C. அரு - வடிவம்

D. ஆயம் - தோழியர் கூட்டம்

E. விடை தெரியவில்லை

147. கூற்று : சீவகசிந்தாமணி முக்தி நூல் என்று சிறப்பிக்கப்படுகிறது.

காரணம் : இளமை நிலையாமை, இன்ப நிலையாமை, செல்வ நிலையாமை பற்றி இந்நூல் எடுத்தியம்புகிறது.

A. கூற்று சரி காரணம் தவறு B. கூற்று தவறு காரணம் சரி C. கூற்று (ம) காரணம் சரி

D. கூற்று (ம) காரணம் தவறு E. விடை தெரியவில்லை

148. கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியானது எது (சீவகசிந்தாமணி)

1) சீவகசிந்தாமணிக்கு நிகரான கவிதை நீலகேசி என்பர்.

2) இந்நூல் நாமகள் இலம்பகம் முதல் முக்தி இலம்பகம் வரை 13 இலம்பகங்களையும், 3145 பாடல்களையும் கொண்டது.

3) விருத்தப்பாவால் இயற்றப்பட்ட முதல் காப்பியம்.

4) தமிழ் கவிஞர்களின் அரசன் என திருத்தக்க தேவரை புகழ்ந்தவர் ஜி.யு.போப்.

A. 2, 3 B. 1, 2, 3 C. 1, 3 D. 1, 2, 3, 4 E. விடை தெரியவில்லை

149. கீழ்க்கண்ட கூற்றுகளுள் தவறானது எது?

1) வடமொழியில் உள்ள கத்திய சிந்தாமணி, சத்திர சரளாமணி என்ற இருநூலையும் தழுவி எழுதப்பட்டது சீவகசிந்தாமணி.

2) உ.வே.சா பதிப்பித்த முதல் நூல் சீவகசிந்தாமணி.

3) ஜி.யு.போப் சீவகசிந்தாமணியை இலியட், ஒடிசியுடன் ஒப்பிட்டுள்ளார்.

4) "சிந்தாமணியில் ஓர் அகப்பை முகந்து கொண்டேன்" என்று கம்பர் சீவகசிந்தாமணியை சிறப்பித்துக் கூறியுள்ளார்.

A. 1, 3, 4 B. 3, 4 C. 2, 4 D. எதுவுமில்லை E. விடை தெரியவில்லை

150. பொருத்துக.

a. தெங்கு - 1) யாழ் நரம்பை இழுத்துக் கட்டும் கருவி

b. வெற்றம் - 2) மணம்

c. மாடகம் - 3) தேங்காய்

d. வெறி - 4) வெற்றி

A. 2 3 4 1 B. 1 2 3 4 C. 3 1 4 2 D. 3 4 1 2 E. விடை தெரியவில்லை

151. இன்பங்களைத் துறந்து துறவு பூண வேண்டும் என்பதே இதன் மையக்கருத்து

A. மணிமேகலை B. உதயணகுமார காவியம் C. குண்டலகேசி D. சீவகசிந்தாமணி

E. விடை தெரியவில்லை

152. பொருந்தாத இணையைத் தேர்ந்தெடு.

1) காந்தருவதத்தையின் தோழி - வீணாதிபதி

2) சீவகனுக்கு மாலை சூட்டியவர் - காந்தருவதத்தை

3) செவ்வாய் என்று சிறப்பிக்கப்படுபவர் - வீணாதிபதி


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

4) சீவகனின் நண்பன் - நகுலன்

A. 1, 4 B. 3 C. 1 D. 2, 4 E. விடை தெரியவில்லை

153. வளையாபதி பற்றிய கூற்றுகளுள் சரியானது எது?

1) இந்நூலின் 72 பாக்கள் மட்டுமே கிடைத்துள்ளன.

2) மக்கட் செல்வத்தின் பெருமை பற்றி கூறுகிறது.

3) இந்நூலின் மூலநூல் வைசீக புராணம்.

4) தக்கையாக்க பரணியின் உரையாசிரியர் ஒட்டக்கூத்தர் கவியழகு வேண்டி வளையபதியை நினைத்தேன் என்று குறிப்பிட்டள்ளார்.

A. 1, 2 B. 3, 4 C. 1, 2, 4 D. 1, 2, 3, 4 E. விடை தெரியவில்லை

154. பொருத்துக.

a. தற்கொல்லியை முற்கொல் - 1) யசோதர காவியம்

b. உயிர்க்கொலை தீது - 2) வளையாபதி

c. சமய திவாகர வாமன முனிவர் - 3) நீலகேசி

d. வர்த்தமான தேவர் - 4) சூளாமணி

A. 2 1 3 4 B. 3 1 4 2 C. 1 2 3 4 D. 1 2 4 3 E. விடை தெரியவில்லை

155. “போதற்கு அரும்பிணி தாம்இவை அப்பிணி..................” பாடலடிகளில் பிறவித் துன்பத்தை தீர்க்கும் மூன்று மருந்துகளை குறிப்பிடுகின்றன. இப்பாடலடிகள் அமைந்துள்ள நூல்?

A. யசோதர காவியம் B. மணிமேகலை C. நீலகேசி D. எதுவுமில்லை

E. விடை தெரியவில்லை

156. “உற்றில வாய்ஒலி கொள்ளும் செவியென ஓதுகின்றாய்” என்ற நீலகேசி பாடல் அமைந்துள்ள சருக்கம்

A. தருமவுரைச் சருக்கம் B. பதிகவுரைச் சருக்கம் C. புத்தவாதச் சருக்கம்

D. மொக்கலவாதச் சருக்கம் E. விடை தெரியவில்லை

157. “காக்குவது ஏதெனில் விரதம் காக்கவே” என்ற பாடலடிகள் இடம்பெற்றுள்ள நூல்

A. நீலகேசி B. மணிமேகலை C. சிலப்பதிகாரம் D. யசோதர காவியம்

E. விடை தெரியவில்லை

158. 1) உதயணன் வரலாற்றை தமிழில் கூறிய முதல் நூல்.

2) வடமொழியில் எழுதப்பட்ட பிரகத்கதா எனும் நூலைத் தழுவி தமிழில் எழுதப்பட்டது

மேற்காணும் கூற்றுகளுடன் தொடர்புடைய காப்பியம்

A. கொங்குவேள் மாக்கதை B. பெருங்கதை C. உதயணகுமார காவியம் D. A & B

E. விடை தெரியவில்லை

## திருக்குறள்

159. 1) திருவள்ளுவர் தோன்றியிராவிட்டால் தமிழன் என்ற ஓர் இனம் இருப்பதாக உலகத்தார்க்கு தெரிந்திருக்காது என்று கூறியவர் கி.ஆ.பெ. விஸ்வநாதம்.

2) சொல்லழகும் பொருளழகும் ஒருங்கே ஒளிரும் திருக்குறளை வாழ்க்கைக்கு விளக்கமாகக் கொள்வதே சாலப் பொருத்தம் என்று கூறியவர் சீத்தலைச் சாத்தனார்.

3) “வள்ளுவர்செய் திருக்குறளை, மறவறநன் குணர்ந்தோர்கள்” என்று கூறியவர் பெ. சுந்தரம்பிள்ளை.


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

4) "இணையில்லை முப்பாலுக்கு இந்நிலத்தே" என்று புகழ்ந்தவர் பாரதிதாசன்.

மேற்கூறியவற்றுள் சரியானவை எவை?

A. 1, 2 B. 2, 3 C. 1, 2, 3 D. இவையனைத்தும் E. விடை தெரியவில்லை

160. "மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்

நிலமிசை நீடுவாழ் வார்" என்னும் குறள்படி இவ்வுலகில் நீண்டகாலம் வாழ்பவர்?

A. நல்ல உடல்நிலை கொண்டோர் B. நல்ல மனநிலை உடையவர்கள்

C. இறைவனை அண்டியவர்கள் D. நல்ல உடலும் மனமும் உடையோர்

E. விடை தெரியவில்லை

161. "இரந்து உயிர்வாழ்தல் வேண்டின் ................" என்னும் குறளில் யாசித்து வாழ்வதற்காக கண்டிக்கப்படுவது?

A. யாசிப்போர் B. இல்லை என மறுப்பது C. படைத்தவர் D. வாழ்க்கை

E. விடை தெரியவில்லை

162. "இனையர் இவர்எமக்கு இன்னம்யாம் என்று

புனையினும் புல்லென்னும் நட்பு" என்னும் குறட்பாவில் காட்டப்படும் நட்பு?

A. தங்கள் நட்பினைத் தாமே புகழ்தல் B. தங்கள் நட்பினைப் பிறர் புகழ எதிர்பார்த்தல்

C. துன்பங்களைப் பகிர்தல் D. இவற்றில் எதுவுமில்லை E. விடை தெரியவில்லை

163. "நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனிலன்

நீங்கின் அதனைப் பிற" என்னும் குறட்பா அமைந்துள்ள அதிகாரம்

A. காலமறிதல் B. தெரிந்து செயல்வகை C. இடனறிதல் D. வலியறிதல்

E. விடை தெரியவில்லை

164. "செறுநரைக் காணின் சுமக்க இறுவரை

காணின் கிழக்காம் தலை" இக்குறளின் முதலடியின் கருத்து

A. பகைவருடன் நட்புகொள் B. பகைவரை நேசி C. நேரம்வரும் வரை காத்திரு

D. பகைவரிடம் பணிக E. விடை தெரியவில்லை

165. "உழுவார் உலகத்தார்க்கு அணிஅ∴ தாற்றாது

எழுவாரை எல்லாம் பொறுத்து" - உலகத்திற்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது எது?

A. வண்டி B. கலப்பை C. சக்கரம் D. கோட்டை E. விடை தெரியவில்லை

166. "அன்பின் வழியது உயிர்நிலை அ∴தில்லார்க்கு

என்புதோல் போர்த்த உடம்பு" வெறுப்பு நிறைந்த மனிதன் எதற்கு ஒப்புமைப்படுத்தப்படுகிறான்?

A. பட்டமரம் B. இசையற்ற பாடல் C. விலங்கு D. பிணம்

E. விடை தெரியவில்லை

167. "உள்ளுவது எல்லாம் உயர்வுள்ளல் ............" என்னும் குறளில் எதற்கு முதன்மை தரப்படுகிறது?

A. சொல் B. செயல் C. முயற்சி D. எண்ணம் E. விடை தெரியவில்லை

168. "எண்ணென்ப ஏனை எழுத்தென்ப ................" எனத்தொடங்கும் குறட்பாவில் கல்வி எதனுடன் ஒப்புமை செய்யப்பட்டுள்ளது?

A. உயிர் B. கண் C. இதயம் D. ஆற்றல் E. விடை தெரியவில்லை


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

169. "மடியை மடியா ஒழுகல் குடியைக்
குடியாக வேண்டு பவர்" என்னும் குறளின் படி ஒருவரின் மிகச் சிறந்த உயர்வுக்கு எது தவிர்க்கப்பட வேண்டும்?

A. சோம்பல் B. சோம்பலின்மை C. சகிப்புத்தன்மை D. உற்சாகம்
E. விடை தெரியவில்லை

170. 1) திருக்குறளில் இடம்பெற்றுள்ள ஒரே பழம் நெருஞ்சி.
2) திருக்குறளில் இடம்பெறாத ஒரே உயிரெழுத்து ஔ.
3) திருக்குறளில் இடம்பெற்றுள்ள மரங்களில் ஒன்று பிரம்பு.
4) திருக்குறளில் கோடி என்ற சொல் 7 இடங்களில் காணப்படுகிறது.
மேற்கூறியவற்றுள் சரியானது எது?

A. 1, 2 B. 2, 3 C. 1, 2, 4 D. இவையனைத்தும் E. விடை தெரியவில்லை

171. 1) "கடுகைத் துளைத்து ஏழகடலைப் புகட்டி குறுகத் தரித்த குறள்" என திருக்குறளை சிறப்பித்துக் கூறியவர் இடைக்காடர்.
2) "திருக்குறளை நெஞ்சாரத் தம் வாழ்வில் ஓதித்தொழுது எழுக ஓர்ந்து" எனக் கூறியவர் கவிமணி.
3) "உள்ளுதோறும் உள்ளுதோறும் உள்ளம் உருக்குமே வள்ளுவர் வாய்மொழி மாண்பு" எனக் கூறியவர் மாங்குடி மருதனார்.
மேற்கூறியவற்றுள் தவறான கூற்று?

A. 1, 2 B. 1 C. 2, 3 D. எதுவுமில்லை E. விடை தெரியவில்லை

172. "இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயந்ததோ சால்பு" என்னும் குறட்பா அமைந்துள்ள அதிகாரம்

A. சான்றாண்மை B. இன்னா செய்யாமை C. தெரிந்து செயல்வகை
D. ஒழுக்கமுடைமை E. விடை தெரியவில்லை

## பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்

173. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் உள்ள ஒரே தொகை நூல்

A. திரிகடுகம் B. வேளாண் வேதம் C. ஆசாரக்கோவை D. ஏலாதி
E. விடை தெரியவில்லை

174. பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் தொடர்பான செய்திகளில் சரியானது எது?
1) இவற்றில் நீதிநூல்கள் 11, அகத்திணை சார்பானவை 6 மற்றும் புறத்திணை சார்ந்து ஒரு நூலும் இடம்பெற்றுள்ளது.
2) இவை இருண்ட காலத்தில் தோன்றிய இலக்கியங்கள்
3) திருக்குறள் இந்நூல்களில் ஒன்று

A. 1, 3 B. 1 C. 2, 3 D. 1, 2, 3 E. விடை தெரியவில்லை

175. பொருத்துக.

a. சிறுபஞ்ச மூலம் - 1) 40 பாடல்கள்
b. முதுமொழிக் காஞ்சி - 2) 101 பாடல்கள்


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

c. திரிகடுகம் - 3) 100 பாடல்கள்

d. களவழி நாற்பது - 4) 97 பாடல்கள்

A. 4 3 2 1 B. 3 4 2 1 C. 2 3 4 1 D. 3 2 4 1 E. விடை தெரியவில்லை

176. பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் தொடர்பான கூற்றுகளுள் தவறானது எது?

1) புறப்பொருள் பற்றிக் கூறும் ஒரே நூல் களவழி நாற்பது.

2) ஒரு திணையை மட்டும் பாடிய நூல் கார் நாற்பது.

3) அறநூல்களில் வடசொல் கலப்பு மிகுதியாக உள்ள நூல் கைந்நிலை.

4) முல்லை திணையை முதலாவதாக கொண்ட நூல் ஐந்திணை ஐம்பது.

5) மருந்தின் பெயரால் பெயர் பெற்ற நூல் திரிகடுகம்.

A. 3, 4, 5 B. 2, 3 C. 3 D. 5 E. விடை தெரியவில்லை

177. பொருந்தாத இணையை கண்டறிக.

1) நாய்க்கால் சிறு விரல் போல் நன்கணியராயினும் - நாலடியார்

2) யார் அறிவார் நல்லாள் பிறக்கும் குடி - நான்மணிக்கடிகை

3) நிறைகும் நீர்த்ததும்பல் இல் - திரிகடுகம்

4) ஆர்கலி உலகத்து மக்கட் கெல்லாம் - முதுமொழிக்காஞ்சி

5) ஊனைத் தின்று ஊனைப் பெருக்கல் முன்னின்னா - ஏலாதி

A. 4, 5 B. 3, 5 C. 1, 2, 3 D. 2, 3, 4, 5 E. விடை தெரியவில்லை

178. பொருத்துக.

a. இனியவை நாற்பது - 1) பூதஞ்சேந்தனார்

b. திரிகடுகம் - 2) நல்லாதனார்

c. நான்மணிக்கடிகை - 3) விளம்பி நாகனார்

d. திணைமொழி ஐம்பது - 4) கண்ணன் சேந்தனார்

A. 1 2 3 4 B. 2 3 4 1 C. 3 2 1 4 D. 4 3 2 1 E. விடை தெரியவில்லை

179. பொருத்தமான இணையைத் தேர்ந்தெடு.

1) கற்றலை விட சிறந்தது - ஒழுக்கமுடைமை

2) வன்மையில் சிறந்தது - வாய்மையுடைமை

3) மேதையில் சிறந்தது - கற்றது மறவாமை

4) காதலிற் சிறந்தது - கண்ணஞ்சப்படுதல்

5) இளமையில் சிறந்தது - மெய்ப்பிணி இன்மை

A. 1, 3, 5 B. 2, 3 C. 1, 4, 5 D. இவையனைத்தும் E. விடை தெரியவில்லை

180. புதரில் விதைத்த விதைக்கு சமம் என திரிகடுகம் கூறுவது

1) ஆற்றல் இல்லாதவன் தலைமை

2) ஒழுக்கம் இல்லாதவன் தவம்

3) ஒழுக்கத்தை கடைபிடிக்காதவனின் அழகு

A. 1, 2 B. 2, 3 C. 1, 3 D. 1, 2, 3 E. விடை தெரியவில்லை

181. கீழ்க்காணும் கூற்றுகளுடன் தொடர்புடைய நூல்

1) பெண்ணை இழிவுபடுத்துதல் நஞ்சு எனக் கூறுகிறது.


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

2) இந்நூல் பொருளமைப்பில் திரிகடுகத்தை ஒத்துள்ளது.

3) இந்நூலின் கடவுள் வாழ்த்து பாடலில் திருமால், சிவன், நான்முகன் ஆகிய மும்மூர்த்திகளையும் வணங்குதலை கூறுகிறது.

A. இனியவை நாற்பது B. இன்னா நாற்பது C. நான்மணிக்கடிகை D. சிறுபஞ்ச மூலம்

E. விடை தெரியவில்லை

182. பொருந்தாத இணையை கண்டறிக.

A. தமிழருக்கு அருமருந்து - திரிகடுகம்

B. உலகியல் உண்மைகளை தெளிவாக எடுத்தியம்பும் நூல் - முதுமொழிக்காஞ்சி

C. வேள்வி பலியிடுதல் கூடாது - திரிகடுகம்

D. கள்ளுண்ணாமை, புலாலுண்ணாமை - இன்னாநாற்பது

E. விடை தெரியவில்லை

183. பொருத்துக.

a. புகவா - 1) முளைப்ப

b. நாறுவ - 2) உணவாக

c. விச்சை - 3) பண்பில் சிறந்த

d. தகைசால் - 4) கல்வி

A. 4 3 2 1 B. 1 2 3 4 C. 2 1 4 3 D. 3 2 1 4 E. விடை தெரியவில்லை

184. பொருத்துக.

a. மேதைக்கு உரையாமை செல்லும் உணர்வு - 1) சிறுபஞ்சமூலம்

b. விச்சைமற்று அல்ல பிற - 2) நாலடியார்

c. ஒன்றாகு முன்றிலோ இல் - 3) பழமொழி நானூறு

d. மனைக்கு விளக்கம் மடவாள் - 4) நான்மணிக்கடிகை

A. 2 1 3 4 B. 1 4 3 2 C. 4 1 3 2 D. 1 2 3 4 E. விடை தெரியவில்லை

## எட்டுத்தொகை, பத்துப்பாட்டு

185. "அருந்திறல் அணங்கின் ஆவியர் பெருமகன்" என்னும் பாடலடிகளில் குறிப்பிடப்படும் மன்னன்

A. நள்ளி B. அதிகன் C. ஓரி D. பேகன் E. விடை தெரியவில்லை

186. கடையேழு வள்ளல்களின் கொடைத்தன்மையை சிறப்பிக்கும் விதமாக "அறிமடமும் சான்றோர்க்கு அணி" என்று கூறும் நூல்

A. புறநானூறு B. சிறுபாணாற்றுப்படை C. பழமொழி நானூறு D. நற்றிணை

E. விடை தெரியவில்லை

187. "காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே
மாநிறைவு இல்லதும் பல்நாட்கு ஆகும் .................." என்று தொடங்கும் புறநானூற்று பாடலில் எத்தன்மையில் நாடு கெடும் என பிசிராந்தையார் கண்டிக்கிறார்?


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

A. அரசனது பகை B. அரசனது போர்முறை C. அரசனது பாதுகாப்பு நெறி
D. அரசனது வரிவிதிப்பு E. விடை தெரியவில்லை

188. புறநானூறு தொடர்பான கூற்றுகளுள் சரியானது எது?

1) கடவுள் வாழ்த்து பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார்.
2) தமிழரின் வாழ்வியல் சிந்தனைகளை கருவூலமாக கொண்டு விளங்கும் நூல்.
3) புறநானூற்றின் சில பாடல்களை ஜி.யு.போப் "The Four Hundred Songs of War and Wisdom : An Antholoy of poems from Classical Tamil, the Purananuru" என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.
4) உ.வே.சா 1894 ஆம் ஆண்டு இந்நூலை அச்சில் பதிப்பித்தார்.

A. அனைத்தும் சரி B. 1, 2, 3 C. 1, 2 D. 1, 2, 4 E. விடை தெரியவில்லை

189. பொருத்தமான இணையைக் கண்டறிக.

1) யாத்து - சேர்த்து
2) ஆலமர் செல்வன் - திருமால்
3) சாவம் - பெரிய மலை
4) விளி அறி - குரல் கேட்ட
5) என்னூழ் - சூரியனின் வெப்பம்

A. 1, 2, 4 B. 1, 4, 5 C. 3, 4 D. இவையனைத்தும் E. விடை தெரியவில்லை

190. அகநானூறு பற்றிய கூற்றுகளுள் சரியானது எது?

1) இந்நூல் 13 அடிச் சிற்றெல்லையும் 33 அடி பேரெல்லையும் கொண்டது.
2) 145 புலவர்கள் பாடிய 400 பாடல்களைக் கொண்டது. மேலும் சொல்ல வந்த கருத்தை உள்ளுறை, இறைச்சி வழியாக உரைப்பது இதன் சிறப்பு.
3) தொகுப்பித்தவர், தொகுத்தவர் பெயர் தெரியவில்லை.
4) இது குடவோலை தேர்தல் முறை பற்றி கூறும் நூல். ஒழுங்குமுறையில் தொகுக்கப்பட்ட ஒரே தொகை நூல் இதுவே.
5) இந்நூலின் மூன்று பிரிவுகளான களிற்றியானை நிரையில் 120 பாடல்களும், மணிமிடைப் பவளத்தில் 180 பாடல்களும், நிலத்திலக்கோவையில் 100 பாடல்களும் உள்ளன.

A. 1, 2, 4 B. 3, 4 C. 2, 4, 5 D. இவையனைத்தும் E. விடை தெரியவில்லை

191. பொருந்தாத இணை (அகநானூறு)

எண் வரிசை - திணை
1) 1, 3, 5, 7... - பாலைத் திணை
2) 4, 14, 24... - முல்லைத் திணை
3) 10, 20, 30... - நெய்தல் திணை
4) 6, 16, 26... - மருதத் திணை
5) 2, 8, 12, 18... - குறிஞ்சித் திணை

A. 1, 2, 5 B. 2, 4 C. 4 மட்டும் D. எதுவுமில்லை E. விடை தெரியவில்லை

192. "அறிவும் புகழும் உடையோர் மாய்ந்தென
வறுந்தலை உலகமும் அன்றே" என்ற பாடலடிகள் இடம்பெற்றுள்ள நூல்

Padasalai.Net


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

A. அகநானூறு B. புறநானூறு C. குறுந்தொகை D. நற்றிணை
E. விடை தெரியவில்லை

193. பொருத்துக.

a. கலன் - 1) கன்னம்
b. மழு - 2) யாழ்
c. புலம்பு - 3) தனிமை
d. கவுள் - 4) கோடரி

A. 2 3 1 4 B. 1 2 3 4 C. 1 4 3 2 D. 2 4 3 1 E. விடை தெரியவில்லை

194. நெடுநல்வாடை பற்றிய கூற்றுகளுள் சரியானது எது?

1) பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று. ஆசிரியப்பாவால் இயற்றப்பட்ட இந்நூலின் பாட்டுடைத்தலைவன் பாண்டியன் நெடுஞ்செழியன்.
2) இந்நூலின் சிறப்புப் பெயர் புனையா ஓவியம்.
3) நக்கீரர் இயற்றிய இந்நூலின் அடியெல்லை 188 வரிகளைக் கொண்டது.

A. 1 B. 2 C. 1, 3 D. 1, 2, 3 E. விடை தெரியவில்லை

195. பதிற்றுப்பத்து குறித்த கூற்றுகளுள் சரியானது?

1) இரண்டாம் பத்தின் பாட்டுடைத் தலைவன் இளஞ்சேரல் இரும்பொறை. இதனைப் பாடியவர் குமட்டூர் கண்ணனார்.
2) சேர அரசர்களைப் பற்றி மட்டுமே பாடும் இலக்கியம்.
3) இந்நூல் முழுவதும் பாடாண் திணையில் அமைந்துள்ளது.
4) ஒவ்வொரு பாட்டின் முடிவிலும் துறை, வண்ணம், தூக்கு, பாடலின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளன.

A. 2, 3, 4 B. 2, 4 C. 1, 2, 3, 4 D. 2, 3 E. விடை தெரியவில்லை

196. பொருத்துக.

a. நிரையம் - 1) நரகம்
b. வறன் - 2) போர்
c. மதுகை - 3) வறுமை
d. சமர் - 4) பெருமிதம்

A. 2 3 1 4 B. 1 2 3 4 C. 4 3 2 1 D. 1 3 4 2 E. விடை தெரியவில்லை

197. நற்றிணை தொடர்பான கூற்றுகளுள் சரியானது?

1) இதன் அடி வரையறை 9 முதல் 12 வரை. விதிவிலக்காக 13 அடிகளை கொண்ட பாடலை இயற்றியவர் போதனார்.
2) இது திருமாலை கடவுள் வாழ்த்தாக கொண்ட நூல். மேலும் வௌவால்களும் கனவு காணும் என்ற அறிவியல் உண்மையைக் கூறுகிறது.
3) எட்டுத்தொகை நூல்களுள் “நல்” என்ற அடைமொழியுடன் குறிப்பிடப்படும் நூல்.
4) இது 275 புலவர்கள் பாடிய 400 பாடல்களைக் கொண்ட நூல்.

A. 1, 2, 4 B. 2, 3 C. 1, 4 D. இவையனைத்தும் E. விடை தெரியவில்லை


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

198. ஒரு வேந்தன் எதிர்சென்று அவன் தன்மையைக் கூறி புகழ்வது

A. இயன்மொழித் துறை B. மனை மருட்சி C. கூதிர்ப்பாசறை துறை

D. செவியறிவுறூஉ துறை E. விடை தெரியவில்லை

199. பொருத்தமான இணையைக் கண்டறி.

1) தாள் - முயற்சி

2) முனிதல் - வெறுத்தல்

3) தமியர் - தனித்தவர்

4) சிதவல் - தலைப்பாகை

A. 1, 2, 3 B. 3, 4 C. 1, 2 D. இவையனைத்தும் E. விடை தெரியவில்லை

200. ஐங்குறுநூறு பற்றிய நூல்களுள் தவறானது எது?

1) இதனை தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர்க் கிழார், தொகுப்பித்தவர் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை.

2) ஐங்குறுநூறு திணை வரிசை - மருதம், நெய்தல், குறிஞ்சி, பாலை, முல்லை.

3) ஐந்து திணைகளுக்கும் சேர்த்து 500 பாடல்களைக் கொண்டது.

4) அகவற்பாக்களால் ஆன இந்நுஸலின் அடிவரையறை 3 - 6.

A. 1, 2, 3 B. 2, 3, 4 C. 2, 3 D. இவையனைத்தும் E. விடை தெரியவில்லை


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

## விடைக்குறிப்பு

| S.No | Ans | S.No | Ans | S.No | Ans | S.No | Ans | S.No | Ans |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | C | 41 | B | 81 | D | 121 | C | 161 | C |
| 2 | B | 42 | A | 82 | B | 122 | D | 162 | A |
| 3 | C | 43 | D | 83 | D | 123 | B | 163 | C |
| 4 | B | 44 | B | 84 | B | 124 | D | 164 | D |
| 5 | B | 45 | D | 85 | C | 125 | D | 165 | C |
| 6 | C | 46 | C | 86 | D | 126 | C | 166 | D |
| 7 | D | 47 | B | 87 | C | 127 | C | 167 | D |
| 8 | C | 48 | C | 88 | B | 128 | D | 168 | B |
| 9 | D | 49 | D | 89 | A | 129 | B | 169 | A |
| 10 | C | 50 | B | 90 | D | 130 | D | 170 | C |
| 11 | B | 51 | D | 91 | C | 131 | D | 171 | D |
| 12 | C | 52 | C | 92 | C | 132 | A | 172 | A |
| 13 | A | 53 | C | 93 | A | 133 | A | 173 | B |
| 14 | A | 54 | A | 94 | A | 134 | D | 174 | D |
| 15 | A | 55 | D | 95 | D | 135 | C | 175 | A |
| 16 | C | 56 | B | 96 | C | 136 | D | 176 | C |
| 17 | D | 57 | D | 97 | D | 137 | D | 177 | B |
| 18 | A | 58 | B | 98 | D | 138 | C | 178 | A |
| 19 | B | 59 | B | 99 | D | 139 | C | 179 | D |
| 20 | B | 60 | A | 100 | C | 140 | C | 180 | D |
| 21 | D | 61 | D | 101 | A | 141 | C | 181 | A |
| 22 | D | 62 | B | 102 | B | 142 | A | 182 | A |
| 23 | A | 63 | D | 103 | D | 143 | B | 183 | C |
| 24 | D | 64 | C | 104 | C | 144 | D | 184 | D |
| 25 | D | 65 | C | 105 | C | 145 | D | 185 | D |
| 26 | C | 66 | B | 106 | C | 146 | C | 186 | C |
| 27 | D | 67 | A | 107 | B | 147 | C | 187 | D |
| 28 | B | 68 | B | 108 | B | 148 | D | 188 | D |
| 29 | C | 69 | A | 109 | A | 149 | D | 189 | B |
| 30 | C | 70 | C | 110 | B | 150 | D | 190 | C |
| 31 | D | 71 | B | 111 | D | 151 | D | 191 | D |
| 32 | C | 72 | B | 112 | C | 152 | B | 192 | B |
| 33 | B | 73 | A | 113 | A | 153 | D | 193 | D |
| 34 | D | 74 | B | 114 | D | 154 | A | 194 | D |
| 35 | A | 75 | A | 115 | A | 155 | C | 195 | A |
| 36 | B | 76 | D | 116 | D | 156 | C | 196 | D |
| 37 | A | 77 | B | 117 | B | 157 | D | 197 | D |
| 38 | A | 78 | B | 118 | B | 158 | D | 198 | A |
| 39 | D | 79 | D | 119 | A | 159 | D | 199 | D |
| 40 | B | 80 | A | 120 | D | 160 | C | 200 | D |

Padasalai.Net

கோ. செந்தில்குமார் எம்.ஏ., எம்.பில்., பி.எட். பட்டதாரி தமிழ் ஆசிரியர்,
அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளி, அல்லிநகரம், தேனி மாவட்டம். பேசுவதற்கு: 99420 52222

Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

## பகுதி - ஆ - தமிழ் அறிஞர்களும் தமிழ்த் தொண்டும்

1. 1) பெண்ணுரிமையை நிலைநாட்டுவதில் நீறுபூத்த நெரப்பாய் இராமல் ஞாயிற்றின் ஒளியாய்ச் சுடர்விட்டார்.
2) 1917ல் தமது முதல் போராட்டத்தை மயிலாடு துறையில் தொடங்கினார்.
3) 1989 ஆம் ஆண்டு திருமண உதவித் திட்டம் (ஏழைப் பெண்களுக்கு ஆரம்பிக்கப்பட்டது)
4) 1938 ஆம் ஆண்டு நடைபெற்ற மொழிப்போர் பேரணியில் உறையூர் முதல் சென்னை வரை நாற்பத்திரண்டு நாள் 577 மைல் நடைப்பயணத்தில் கலந்து கொண்ட ஒரே பெண் இவர்தான்.
இக்கூற்றுடன் தொடர்புடையவர் யார்?
A) Dr. முத்துலட்சுமி B) மூவலூர் இராமாமிர்தம் C) தர்மாம்பாள்
D) இராஜேஸ்வரி அம்மையார் E) விடை தெரியவில்லை

2. கூற்றை ஆராய்க:
1) நம்பிக்கை தான் அவரது ஆயுதம் என்று தில்லையாடி வள்ளியம்மை குறித்து தென்னாப்பிரிக்க சத்தியாகிரகம் என்னும் நூலில் குறிக்கப்பட்டுள்ளார்.
2) தென்னாப்பிரிக்கா வரலாற்றில் வள்ளியம்மையின் பெயர் என்றும் நிலைத்து நிற்கும் என்று காந்தியடிகள் இந்தியன் ஒப்பீனியன் இதழில் எழுதியுள்ளார்.
A) 1, 2 சரி B) 1 சரி 2 தவறு C) 1 தவறு 2 சரி D) 1, 2 தவறு
E) விடை தெரியவில்லை

3. இவற்றில் பொருந்தாதது எது / எவை? (அம்புஜத்தம்மாள்)
1) பெண்ணடிமைக்கு எதிராகக் குரல் கொடுத்தார்.
2) மகாகவி பாரதியாரின் பாடல்களை பாடி விடுதலை உணர்வை ஊட்டினார்.
3) காந்தியடிகளால் தத்தெடுக்கப்பட்ட மகள் என்று செல்லமாக அழைக்கப்பட்டார்.
4) தென்னாட்டின் ஜான்சிராணி என்று காந்தியடிகளால் அழைக்கப்பட்டார்.
A) 1 (ம) 4 B) 3 மட்டும் C) 4 மட்டும் D) 2 மட்டும் E) விடை தெரியவில்லை

4. எல்லோரும் இன்புற்று இருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்று அறியேன் பராபரமே - இவ்வரிகளைக் கூறியவர்?
A) குணங்குடி மஸ்தான் சாகிபு B) கண்ணதாசன் C) தாயுமானவர் D) வள்ளலார்
E) விடை தெரியவில்லை

5. பொருத்துக.
a. தண்டருள் - 1. முழுமையாய்
b. கூர் - 2. தொண்டு
c. ஏவல் - 3. குளிர்ந்த கருணை
d. பூரணமாய் - 4. மிகுதி
A) 3 2 4 1 B) 1 4 2 3 C) 3 4 2 1 D) 4 1 3 2 E) விடை தெரியவில்லை

6. இவற்றில் சரியானது அல்லாதது எது?
A) சின்மய தீபிகை B) ஜீவகாருண்ய ஒழுக்கம் C) தொண்டை மண்டல சதகம்
D) ஒழுவிலொடுக்கம் E) விடை தெரியவில்லை

7. இவற்றில் சரியானது எது/எவை?
1) உயிரிரக்கமே பேரின்ப வீட்டின் திறவுகோல் - தாயுமானவர்.
2) உபநிடதக் கருத்துக்களை அதிகம் கூறியவர் - தாயுமானவர்.


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

3) உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன் என்னும் பெரியபுராணப் பாடலைப் பாடியர் - திருநாவுக்கரசர்.

4) கல்லாருக்கும் கற்றாருக்கும் களிப்பருக்கும் களிப்பே எனத் தமிழைப் பாராட்டியுள்ளார். - வள்ளலார்.

A) அனைத்தும் சரி B) 1 (ம) 3 C) 2 (ம) 4 D) 1, 2 (ம) 4 E) விடை தெரியவில்லை

8. 1. சங்கடம் விளைவிக்கும் சாதியையும் மதத்தையும் தவிர்த்தேன்.

2. அகத்தே கறுத்துப் புறத்து வெளுத்து இருந்த உலகர் அனைவரையும் சகத்தே திருத்த என்று இறைவன் தம்மை வருவித்ததாக கூறுவார்.

3. பயில்வதற்கும் பாடுவதற்கும் எளிமையானதாக தமிழ் உள்ளது என்று கூறினார்.

4. அனைத்து வியாதிகளுக்கும் உணவே மருந்து என்று கூறியவர்

இக்கூற்றுகளுடன் தொடர்புடையவர் யார்?

A) அயோத்திதாச பண்டிதர் B) பாரதியார் C) பாரதிதாசன் D) வள்ளலார்

E) விடை தெரியவில்லை

9. பொருத்துக.

a. இனிப்பு - 1. மென்மை

b. துவர்ப்பு - 2. உணர்வு

c. கைப்பு - 3. வளம்

d. கார்ப்பு - 4. ஆற்றல்

e. உவர்ப்பு - 5. தெளிவு

A) 3 2 5 4 1 B) 2 1 4 3 5 C) 4 2 1 5 3 D) 3 4 1 2 5 E) விடை தெரியவில்லை

10. இவற்றில் சரியானவை எது/எவை?

1) “உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே” எனப் புறநானூறும் மணிமேகலையும் கூறுகின்றது.

2) மீதூண் விரும்பேல் எனக் கூறியவர் - ஔவையார்.

3) “வேர்பாரு தழைபாரு மிஞ்சினக்கால் பற்பசெந்தூரம் பாரே” - சித்தர்கள்

4) காலைத் தொட்டுக் கும்பிட்டுக்
காலன் ஓடிப் போவானே - கவிமணி

A) அனைத்தும் B) 1, 2, 4 சரி 3 தவறு C) 1, 2 சரி 3, 4 தவறு D) 1, 3 சரி 2, 4 தவறு

E) விடை தெரியவில்லை

11. இவற்றில் சரியானவை அல்லாதவற்றை தேர்வு செய்க. (நடைமுறையில் உள்ள மருத்துவங்கள்)

1. சித்த மருத்துவம் 2. ஆயுர்வேத மருத்துவம் 2. யுனானி மருத்துவம் 4. அலோபதி மருத்துவம்

A) 2 மட்டும் B) 3 மட்டும் C) 4 மட்டும் D) இவற்றில் எதுவுமில்லை

E) விடை தெரியவில்லை

12. கூற்றை ஆராய்க.

1) கரிசலாங்கண்ணி இரத்தசோகை, செரிமானக் கோளாறு, மஞ்சள் காமாலை போன்ற நோய்களுக்கு நல்ல மருந்தாகப் பயன்படுகிறது. இவற்றை கரிசாலை, கையாந்தகரை, பிருங்கராசம், தேகராசம் என்று வேறு பெயரில் அழைக்கலாம்.

2) தூதுவளை இலையை நல்லெண்ணெய் சமைத்து 21 நாட்கள் உண்டால் சுவாசகாசம் அகலும், இளைப்பு, இருமல் போகும், குரல்வளத்தை மேம்படுத்தும். இவற்றை சிங்கவல்லி தூதுவளை என்றும் அழைக்கலாம்.

A) 1, 2 சரி B) 1 சி 2 தவறு C) 1 தவறு 2 சரி D) 1, 2 தவறு

E) விடை தெரியவில்லை


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

13. பொருத்துக.

a. முந்நீர் வழக்கம் - 1. அகநானூறு

b. உலகு கிளர்ந்தன்ன உருகெழு வங்கம் - 2. மணிமேகலை

c. அருவிகலம் தரீஇயர் நீர்மிசை நிவக்கும் பெருங்கலி வங்கம் - 3. தொல்காப்பியம்

d. நளியிறு முந்நீர் நாவாய் ஓட்டி - 4. புறநானூறு

e. கலஞ்செய் கம்மியர் வருகெனக் கூஉய் - 5. பதிற்றுப்பத்து

A) 3 1 5 4 2 B) 4 3 2 1 5 C) 3 2 5 1 4 D) 4 5 1 3 2 E) விடை தெரியவில்லை

14. பொருத்துக.

a. இமயத்திலிருந்து வந்தவை - உணவுப்பொருள்

b. கொற்கையிலிருந்து வந்தவை - பவளம்

c. கீழ்கடலிலிருந்து வந்தவை - முத்து

d. ஈழ நாட்டிலிருந்த வந்தவை - சந்தனம், அகில்

A) 1 2 3 4 B) 4 3 2 1 C) 3 4 1 2 D) 4 3 1 2 E) விடை தெரியவில்லை

15. கூற்றை ஆராய்க.

1) மகத நன்நாட்டு வாள்வாய் வேந்தன் பகைப்புறத்துக் கொடுத்த பட்டிமண்டபம் - சிலப்பதிகாரம்.

2) பட்டிமண்டபத்துப் பாங்கு அறிந்து ஏறுமின் - திருவாசகம்.

3) பட்டிமண்டபம் ஏற்றினை, ஏற்றினை எட்டினோடு இரண்டும் அறியேனையே என்கிறது - மணிமேகலை.

4. பன்ன அரும் கலைதெரி பட்டிமண்டபம் - பெரியபுராணம்.

A) 1, 4 சரி 2, 3 தவறு B) 1 சரி 2, 3, 4 தவறு C) 1, 3 சரி 2, 4 தவறு

D) 1, 2 சரி 3, 4 தவறு E) விடை தெரியவில்லை

16. கூற்றை ஆராய்க.

கூற்று 1 : 1863ம் ஆண்டு அகழாய்வில் இராபர்ட் புரூஸ்புட் என்னும் தொல்லியல் அறிஞர் சென்னை பல்லாவரம் செம்மண் மேட்டுப்பகுதியில் எலும்பையும், கற்கருவியையும் கண்டுபிடித்தார்.

கூற்று 2 : இக்கருவி இந்தியாவில் கண்டெடுக்கப்பட்ட முதல் கல்லாயுதம் ஆகும்.

A) 1, 2 சரி B) 1 சரி 2 தவறு C) 1 தவறு 2 சரி D) 1, 2 தவறு E) விடை தெரியவில்லை

17. தமிழரின் வீர விளையாட்டான ஏறு தழுவுதல் எங்கு காணப்படுகிறது?

A) கீழார் வெளி B) கீழடி C) ஹரப்பா D) மொகஞ்சதாரோ E) விடை தெரியவில்லை

18. கூற்று : திண்டுக்கல் தமிழ்நாட்டின் ஹாலந்து என்றும் சிறப்பிக்கப்படுகிறது.

காரணம் : இப்பகுதி மலர் உற்பத்தியில் முதலிடம் வகுக்கிறது.

A) கூற்று சரி காரணம் சரி சரியான விளக்கம் B) கூற்று சரி காரணம் சரி சரியான விளக்கமல்ல C) கூற்று சரி காரணம் தவறு D) கூற்று தவறு காரணம் சரி E) விடை தெரியவில்லை

19. 1) கிரேக்க அறிஞர் தாலமி இம்மாவட்டத்தை தமிழ்நாட்டின் முதன்மையான உள்நாட்டு வணிக மையமாகக் குறிப்பிட்டுள்ளார்.

2) கல்குவாரி தொழிற்சாலைகள் இங்கு அதிகம் உள்ளது.

3) கைத்தறி நெசவு ஆடைகளுக்குப் பெயர் பெற்ற மாவட்டம்.

4) பேருந்து கட்டுமானத் தொழிலின் சிகரம்

மேற்கூறிய கூற்றுகளுக்குத் தொடர்பான இடம் எது?


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

A) சேலம் B) நாமக்கல் C) கரூர் D) திருப்பூர் E) விடை தெரியவில்லை

42. 1) சமய பூசலுக்காக வித்திட்ட தமிழின் இரண்டாவது காப்பிய நூல் மணிமேகலை.

2) அறவணடிகளின் அறிவுரைப்படி ஆதிரையிடம் முதன்முதலில் அமுதசுரபியில் பிச்சை பெற்றவள் மணிமேகலை.

3) உடலில் தோன்றும் தீவினையாக மணிமேகலை குறிப்பிடுவது கொலை, களவு (ம) காமம்.

மேற்கூறியவற்றுள் சரியான கூற்று எது?

A. 1, 2 B. 2, 3 C. 1, 3 D. 1, 2, 3 E. விடை தெரியவில்லை

43. “உள்ளுவது எல்லாம் உயர்வுள்ளல் ...........” என்னும் குறளில் எதற்கு முதன்மை தரப்படுகிறது?

A. சொல் B. செயல் C. முயற்சி D. எண்ணம் E. விடை தெரியவில்லை

44. கீழ்க்காணும் கூற்றுகளுடன் தொடர்புடைய நூல்

1) பெண்ணை இழிவுபடுத்துதல் நஞ்சு எனக் கூறுகிறது.

2) இந்நூல் பொருளமைப்பில் திரிகடுகத்தை ஒத்துள்ளது.

3) இந்நூலின் கடவுள் வாழ்த்து பாடலில் திருமால், சிவன், நான்முகன் ஆகிய மும்மூர்த்திகளையும் வணங்குதலை கூறுகிறது.

A. இனியவை நாற்பது B. இன்னா நாற்பது C. நான்மணிக்கடிகை D. சிறுபஞ்ச மூலம்

E. விடை தெரியவில்லை

45. பொருத்துக.

a. கலன் - 1) கன்னம்

b. மழு - 2) யாழ்

c. புலம்பு - 3) தனிமை

d. கவுள் - 4) கோடரி

A. 2 3 1 4 B. 1 2 3 4 C. 1 4 3 2 D. 2 4 3 1 E. விடை தெரியவில்லை

46. “துடியன் நாயினன் தோல்செருப்பு ஆர்த்த பேர் அடியன்” என்னும் கம்பராமாயணப் பாடலடிகளில் யாருடைய தோற்றம் பற்றி குறிப்பிடப்படுகிறது?

A. இலக்குவன் B. இராமன் C. குகன் D. அனுமன் E. விடை தெரியவில்லை

47. கீழ்க்காணும் கூற்றுகளுடன் தொடர்புடையவர் யார்?

1) திருமுனைப்பாடி நாட்டை ஆண்ட நரசிங்கமுனையர் என்ற மன்னனால் தத்தெடுத்து வளர்க்கப்பட்டவர்.

2) “வித்தகம் பேச வேண்டா விரைந்து பணி செய்ய வேண்டும்” என்று இறைவன் இவரிடம் கூறினார்.

3) இவரின் மேற்கோள் “தம்மானை அறியாத சாதியாகும் ஊரோ”

A. திருஞானசம்பந்தர் B. திருநாவுக்கரசர் C. மாணிக்கவாசகர் D. சுந்தரர்

E. விடை தெரியவில்லை


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593
Padasalai.Net

48. 1) செங்கீரைப் பருவத்தில் குழந்தை தன் இருகை ஊன்றி ஒரு காலினை மடக்கி மற்றொரு காலை நீட்டி தலைநிமிர்ந்தும் முகமசைத்தும் ஆடும்.

2) கிண்கிணி அணிகலன் இடையில் அணிவது

மேற்கூறியவற்றுள் தவறானது எது?

A. 1 B. 2 C. 1, 2 D. எதுவுமில்லை E. விடை தெரியவில்லை

49. பொருத்தமான இணையைத் தேர்ந்தெடு.

1) தத்துவ படைப்பு - குயில்பாட்டு

2) மகாகவி பட்டம் - வ.ரா.

3) பாட்டுக்கொரு புவலன் பாரதி - பாரதிதாசன்

4) வந்தேமாதரம் மொழிபெயர்ப்பு - பாரதியார்

5) திருவிதாங்கூர்ப் பண்டை மன்னர் கால ஆராய்ச்சி - P. சுந்தரனார்

A. 1, 2, 3 B. 3, 4, 5 C. 1, 2, 4, 5 D. இவையனைத்தும்

E. விடை தெரியவில்லை

50. 1) இவரின் பாடல்கள் வினாவிடையாகச் செல்லும்.

2) ஞானரத்தினக் குறவஞ்சி என்னும் பாடலை பாடியுள்ளார்.

3) சிங்கன் கேள்வி கேட்பதாகவும் சிங்கி பதில் சொல்வதாகவும் பாடல்கள் அமைந்திருக்கும்.

மேற்காணும் கூற்றுகளுடன் தொடர்புடையவர் யார்?

A. சட்டை முனி B. கொங்கணச் சித்தர் C. அழுகுணிச் சித்தர் D. பீர் முகம்மது

E. விடை தெரியவில்லை

51. கூற்றுக்கு பொருத்தமான தலைவரைத் தேர்வு செய்க.

1. இளைஞர்களின் உள்ளத்தில் நாட்டுப்பற்று, தெய்வப்பற்று, மொழிப்பற்று வளரும் வகையில் கல்வி அமைதல் வேண்டும்.

2. தன்னாட்டுப் பொருள் இயக்கமான சுதேசி இயக்கத்தை வளர்க்கும் கடமை இளைஞர்களுக்கே உரியது என்று கூறினார்.

A) நேரு B) காந்தி C) மு.வ D) ராஜாஜி E) விடை தெரியவில்லை

52. கூற்றுக்கு பொருத்தமான தலைவரைத் தேர்வு செய்க.

1. அயலானின் தாயைப் பழித்து வெறுக்காமலே நம் தாயிடம் அன்பு செலுத்த முடியும்.

2. ஆட்சி மொழி என்றால் சட்டசபை முதல் நீதிமன்றம் வரையில் தமிழ் வழங்க வேண்டும்.

A) நேரு B) காந்தி C) மு.வ. D) அண்ணா E) விடை தெரியவில்லை

53. "தமிழர் திருநாள் தை முதல் நாளாம்
அமிழ்தென இனிக்கும் பொங்கல் திருநாள்" என்றவர்

A) ந. பிச்சமூர்த்தி B) முடியரசன் C) அண்ணா D) மு.வ E) விடை தெரியவில்லை

54. பொருத்துக.

a. பரிதிமாற் கலைஞர் - 1. நாடகத்தமிழ்

b. பம்மல் சம்பந்தனார் - 2. நாடக இயல்

c. மறைமலையடிகள் - 3. சாகுந்தலம்


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

d. பாரதிதாசன் - 4. இரணியன்

A) 2 1 3 4 B) 4 3 1 2 C) 1 2 3 4 D) 4 3 2 1 E) விடை தெரியவில்லை

55. பொருத்துக.

a. தோல் கருவி - 1. முழவு

b. நரம்புக் கருவி - 2. வீணை

c. காற்றுக் கருவி - 3. சேகண்டி

d. கஞ்சக் கருவி - 4. குழல்

A) 1 2 3 4 B) 4 3 2 1 C) 1 2 4 3 D) 2 1 3 4 E) விடை தெரியவில்லை

56. கூற்றுகளை ஆராய்க.

1. மண்ணமை முழவு எனப் பொருநராற்றுப்படையில் இடம் பெற்றுள்ளது.

2. காலத்தை அறிவிக்க நாழிகை முழவு, காலை முழவு ஆகியவை பயன்படுத்தப்பட்டன.

A) 1, 2 சரி B) 2 சரி C) 1 சரி D) 1, 2 தவறு E) விடை தெரியவில்லை

57. கூற்றுகளை ஆராய்க.

1. தமிழிசை இயக்கத்தின் தந்தை - ஆபிரகாம் பண்டிதர்.

2. “சங்கீத வித்தியா மகாஜன சங்கம்” - மறைமலை அடிகள்.

A) 1, 2 சரி B) 1 சரி C) 2 சரி D) 1, 2 தவறு E) விடை தெரியவில்லை

58. கூற்றிற்கு பொருத்தமான நபரை தேர்வு செய்க.

1. “சமரச சன்மார்க்க சபை” என்ற நாடகக் குழுவை உருவாக்கினார்.

2. ஒரே இரவில் எழுதி முடித்த நாடகம் - அபிமன்யு.

3. இவர் இயற்றிய “கோவலன் சரித்திரம்” மதுரையில் அரங்கேற்றப்பட்டது.

A) வள்ளலார் B) சங்கரதாஸ் சுவாமிகள் C) அண்ணா D) பம்மல் சம்பந்தனார்

E) விடை தெரியவில்லை

59. கீழ்க்கண்டவற்றுள் தவறானது (கர்நாடக சங்கீத மும்மூர்த்திகள்)

A) முத்துத்தாண்டவர் B) தியாகையர் C) சியாமா சாஸ்திரிகள் D) முத்துச்சாமி தீட்சிதர்

E) விடை தெரியவில்லை

60. தவறாகப் பொருந்தியது.

A) முதல் சங்கம் - பெருங்குருகு, பெருநாரை

B) இடைச்சங்கம் - பேரிசை, சிற்றிசை

C) கடைச்சங்கம் - இசைமரபு, இசை நுணுக்கம், ஐந்தொகை

D) இவற்றில் எதுவுமில்லை

E) விடை தெரியவில்லை

61. கீழ்க்காணும் கூற்றுகளைக் காண்க.

1. இடைச் சொற்கள் தமிழில் மிகுதியாக இல்லை.

2. இவையே மொழிப் பயன்பாட்டை முழுமையாக்குகின்றன.

3. இடைச்சொற்கள் தாமாக தனித்து இயங்கும் இயல்பை உடையன அல்ல என்கிறார் தொல்காப்பியர்.

4. உரிச்சொற்கள் செய்யுளுக்கே உரியன என நன்னூலார் கூறுகிறார்.


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

A. 1, 2 சரி 3, 4 தவறு B. 1, 2, 3 சரி 4 தவறு C. 1, 3 சரி 2, 4 தவறு

D. அனைத்தும் சரி E. விடை தெரியவில்லை

62. கீழ்க்காணும் புணர்ச்சிகளில் குற்றியலுகரப் புணர்ச்சி எது?

A. பூக்கூடை B. திருவருள் C. வண்டினம் D. பொன்வளை E. விடை தெரியவில்லை

63. கீழ்க்காண்பனவற்றுள் பெயர் இடைநிலையைக் கண்டறிக.

A. த், ட், ற், ன் B. ப், வ், க் C. வ், ச், த், ந், ஞ் D. இல், அல், ஆ

E. விடை தெரியவில்லை

64. நிகழ்கால வினையெச்ச வாய்பாட்டைக் கூறுக.

A. செயின் B. செய்து C. செய D. செய்யிய E. விடை தெரியவில்லை

65. எச்ச வினையானது காலத்தை உணர்த்தாமல், பண்பினை உணர்த்தி வினைமுற்றைக் கொண்டு முடிவது ...................

A. எதிர்கால வினையெச்சம் B. இறந்தகால வினையெச்சம் C. தெரிநிலை வினையெச்சம்

D. குறிப்பு வினையெச்சம் E. விடை தெரியவில்லை

66. பெரியபுராணம் தரும் செய்திகளில் சரியானவை எவை?

1) 63 நாயன்மார்களில் காரைக்கால் அம்மையார், இசைஞானியார் (ம) மங்கையர்க்கரசியார் ஆகியோர் பெண்கள்.

2) முதுமை வேண்டிப் பெற்று கைலாயம் சென்றவர் காரைக்கால் அம்மையார்.

3) விதைத்த நெல்லை எடுத்துச் சமைத்து சிவனடியார்க்கு உணவு படையத்தவர் இளையான்குடி நாயனார்.

4) பிள்ளைக்கறி சமைத்து படைத்தவர் சிறுதொண்டர்.

A. 1, 2, 3 B. 2, 4 C. 1, 2 D. இவையனைத்தும் E. விடை தெரியவில்லை

67. பொருத்துக.

a. விலோதம் - 1) துணியாலான கொடி

b. வசி - 2) மழை

c. வேதிகை - 3) குற்றம்

d. தோம் - 4) திண்ணை

A. 4 1 3 2 B. 1 2 3 4 C. 2 3 1 4 D. 1 2 4 3 E. விடை தெரியவில்லை

68. "எண்ணென்ப ஏனை எழுத்தென்ப ................" எனத்தொடங்கும் குறட்பாவில் கல்வி எதனுடன் ஒப்புமை செய்யப்பட்டுள்ளது?

A. உயிர் B. கண் C. இதயம் D. ஆற்றல் E. விடை தெரியவில்லை

69. பொருந்தாத இணையை கண்டறிக.

A. தமிழருக்கு அருமருந்து - திரிகடுகம்

B. உலகியல் உண்மைகளை தெளிவாக எடுத்தியம்பும் நூல் - முதுமொழிக்காஞ்சி

C. வேள்வி பலியிடுதல் கூடாது - திரிகடுகம்

D. கள்ளுண்ணாமை, புலாலுண்ணாமை - இன்னாநாற்பது

E. விடை தெரியவில்லை


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

70. நெடுநல்வாடை பற்றிய கூற்றுகளுள் சரியானது எது?

1) பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று. ஆசிரியப்பாவால் இயற்றப்பட்ட இந்நூலின் பாட்டுடைத்தலைவன் பாண்டியன் நெடுஞ்செழியன்.

2) இந்நூலின் சிறப்புப் பெயர் புனையா ஓவியம்.

3) நக்கீரர் இயற்றிய இந்நூலின் அடியெல்லை 188 வரிகளைக் கொண்டது.

A. 1 B. 2 C. 1, 3 D. 1, 2, 3 E. விடை தெரியவில்லை

71. பொருத்துக.

| சமய முன்னோடிகள் | இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட இடம் |
|---|---|
| a. அப்பர் | - 1) திருப்பெருந்துறை |
| b. திருஞானசம்பந்தர் | - 2) திருவதிகை |
| c. சுந்தரர் | - 3) திருவெண்ணெய்நல்லூர் |
| d. மாணிக்கவாசகர் | - 4) சீர்காழி |

A. 2 4 1 3 B. 1 2 3 4 C. 2 4 3 1 D. 1 3 2 4 E. விடை தெரியவில்லை

72. தவறான இணையைக் கண்டறி.

1) விலாசம் - அழகு

2) வன்னம் - அழகு

3) நூபுரம் - சிலம்பு

4) மாசுணம் - பாம்பு

A. 1, 2 B. 2 C. 3, 4 D. இவை எதுவுமில்லை E. விடை தெரியவில்லை

73. பாரதியாரின் "தனிமை இரக்கம்" பாடல் முதன்முதலாக வெளிவந்த இதழ்

A. சுதேச மித்ரன் B. இந்தியா C. விவேகபானு D. சக்ரவர்த்தினி

E. விடை தெரியவில்லை

74. "தன்னையறிந்து இன்பமுற வெண்ணிலாவே! ஒரு
தந்திரம் நீ சொல்ல வேண்டும் வெண்ணிலாவே!
நாதர்முடி மேலிருக்கும் வெண்ணிலாவே! என்ற பாடலடிகளை இயற்றியவர்

A. அப்பர் B. திருஞானசம்பந்தர் C. வள்ளலார் D. பட்டினத்தார்

E. விடை தெரியவில்லை

75. "கோடெல்லாம் மட அன்னம் குளமெல்லாம் கடல் அன்ன
நாடெல்லாம் நீர்நாடு தனைஒவ்வா நலமெல்லாம்" எனும் பாடலில் எந்த நாட்டின் செழிப்புக்கு பிற நாடுகள் ஈடாகாது?

A. சோழநாடு B. பாண்டியநாடு C. சேரநாடு D. கலிங்கநாடு

E. விடை தெரியவில்லை

76. கூற்றுகளை ஆராய்க ( ந.முத்துசாமி)

1. நாடகக்கலையை மீட்டெடுப்பதே தமது குறிக்கோள் என்றவர்.

2. கலைஞாயிறு என்று அழைக்கப்படுபவர்.

3. இந்திய அரசின் தாமரைத்திரு விருதினையும், தமிழ்நாடு அரசின் கலைமாமணி விருதையும் பெற்றார்.


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

A) 1, 2, 3 சரி B) 1, 2 சரி C) 2, 3 சரி D) 1 சரி E) விடை தெரியவில்லை

77. "பால் நிலாப் பாதை", "வெட்டவெளிதனில் கொட்டிக் கிடக்குது" ஆகிய நூலின் ஆசிரியர்

A) கண்ணதாசன் B) திரு.வி.க C) சுரதா D) இளையராஜா

E) விடை தெரியவில்லை

78. பொருத்துக.

a. கிழிசல் - 1. நாஞ்சில் நாடன்

b. கிளி பேசுகிறது- 2. ஜி. குப்புசாமி

c. நேர்மை - 3. இராமசாமி

d. அடித்தளம் - 4. விந்தன்

A) 1 4 3 2 B) 1 2 3 4 C) 4 3 2 1 D) 1 3 2 4

E) விடை தெரியவில்லை

79. பொருத்துக.

a. தரங்கம் பாடி தங்கப் புதையல் - 1. கிருபானந்தவாரியார்

b. இருட்டு எனக்குப் பிடிக்கும் - 2. கவிஞர் அறிவுமதி

c. நட்புக்காலம் - 3. ச. தமிழ்ச்செல்வன்

d. திருக்குறள் கதைகள் - 4. பெ. தூரன்

A) 1 2 4 3 B) 3 1 4 2 C) 1 2 3 4 D) 4 3 2 1

E) விடை தெரியவில்லை

80. கீழ்க்காணும் கூற்றிற்கு பொருத்தமான நபர்

1. "ஜெயகாந்தனோடு பல்லாண்டு" என்னும் நூலை எழுதியவர்.

2. இவர் தொடக்கப் பள்ளித் தலைமையாசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றார்.

A) பி.ச. குப்புசாமி B) சீரங்கராயன் C) சிவக்குமார் D) சுப்ரபாரதிமணியன்

E) விடை தெரியவில்லை

81. பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்.

இக்குறளில் பயின்று வந்துள்ள அணி எது?

A. தற்குறிப்பேற்ற அணி B. வேற்றுமை அணி C. உவமையணி D. ஏகதேச உருவக அணி

E. விடை தெரியவில்லை

82. பொருத்துக.

a. நடுகல் - 1. Hero stone

b. புடைப்புச்சிற்பம் - 2. Morpheme

c. குமிழிக்கல் - 3. Conical stone

d. உருபன் - 4. Embosed sculpture

e. ஒலியன் - 5. Phoneme

A. 1 2 3 4 5 B. 1 4 3 2 5 C. 3 4 1 2 5 D. 4 1 3 2 5 E. விடை தெரியவில்லை


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

83. பொருத்தமானதைத் தேர்ந்தெடுக்க.

1. தனித்து நின்று பொருள் தர இயலாதவை.
2. பெயர்ச்சொல்லையும், வினைச்சொல்லையும் சார்ந்து வரும்.
3. வேற்றுமை உருபுகள், உவம உருபுகள் உருவில் வரும்.

A. இடைச்சொல் B. திரிசொல் C. உரிச்சொல் D. எதுவுமில்லை E. விடை தெரியவில்லை

84. தவறானதைக் கண்டறிக.

1. கற்றோருக்கு மட்டுமே விளங்கும் வகையில் அமைந்த சொல் திரிசொல்.
2. வடமொழிச் சொற்கள் தமிழில் திரிந்தும் திரியாமலும் வழங்கப்படுவது வடசொல்.

A. 1, 2 தவறு B. 1 மட்டும தவறு C. 2 மட்டும் தவறு D. எதுவுமில்லை
E. விடை தெரியவில்லை

85. சரியான கூற்றைக் காண்க.

1. ஒரு தொடரில் இரு சொற்களுக்கிடையே வேற்றுமை, உவமை, பண்பு மறைந்து வருவது தொகைநிலைத் தொடர் ஆகும்.
2. இது ஒன்பது வகைப்படும்.

A. 1, 2 சரி B. 2 மட்டும் சரி C. 1 மட்டும் சரி D. இவற்றில் எதுவுமில்லை
E. விடை தெரியவில்லை

86. பொருத்துக.

a. மாடு - 1) எருமைக்கடா
b. கோடு - 2) பச்சிலை மரம்
c. பகடு - 3) பக்கம்
d. தமாலம் - 4) குளக்கரை

A. 3 2 1 4 B. 1 4 3 2 C. 1 2 3 4 D. 3 4 1 2 E. விடை தெரியவில்லை

87. பொருந்தாத இணையைத் தேர்ந்தெடு.

A. குறளை - புறம்பேசுதல்
B. வெ∴கல் - பெருவிருப்பம்
C. அரு - வடிவம்
D. ஆயம் - தோழியர் கூட்டம்
E. விடை தெரியவில்லை

88. "மடியை மடியா ஒழுகல் குடியைக்
குடியாக வேண்டு பவர்" என்னும் குறளின் படி ஒருவரின் மிகச் சிறந்த உயர்வுக்கு எது தவிர்க்கப்பட வேண்டும்?

A. சோம்பல் B. சோம்பலின்மை C. சகிப்புத்தன்மை D. உற்சாகம்
E. விடை தெரியவில்லை

89. பொருத்துக.

a. புகவா - 1) முளைப்ப
b. நாறுவ - 2) உணவாக


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

c. விச்சை - 3) பண்பில் சிறந்த

d. தகைசால் - 4) கல்வி

A. 4 3 2 1 B. 1 2 3 4 C. 2 1 4 3 D. 3 2 1 4 E. விடை தெரியவில்லை

90. பதிற்றுப்பத்து குறித்த கூற்றுகளுள் சரியானது?

1) இரண்டாம் பத்தின் பாட்டுடைத் தலைவன் இளஞ்சேரல் இரும்பொறை. இதனைப் பாடியவர் குமட்டூர் கண்ணனார்.

2) சேர அரசர்களைப் பற்றி மட்டுமே பாடும் இலக்கியம்.

3) இந்நூல் முழுவதும் பாடாண் திணையில் அமைந்துள்ளது.

4) ஒவ்வொரு பாட்டின் முடிவிலும் துறை, வண்ணம், தூக்கு, பாடலின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளன.

A. 2, 3, 4 B. 2, 4 C. 1, 2, 3, 4 D. 2, 3 E. விடை தெரியவில்லை

91. சரியான இணையைக் கண்டறிக.

1) அப்பரின்நெறி - மகன்மை நெறி

2) திருஞானசம்பந்தரின் நெறி - யோக நெறி

3) சுந்தரரின் நெறி - தொண்டு நெறி

A. 1, 2 B. 2, 3 C. 1, 3 D. எதுவுமில்லை E. விடை தெரியவில்லை

92. பொருத்துக.

a. கோல - 1) தோகை

b. வாவி - 2) ஞானி

c. கலாபம் - 3) பொய்கை

d. விவேகன் - 4) அழகிய

A. 1 2 3 4 B. 2 3 1 4 C. 4 3 1 2 D. 3 2 1 4 E. விடை தெரியவில்லை

93. சரியான கூற்றினைக் கண்டறிக.

1) பாரதியின் உரைநடைநூல்களுள் ஒன்று ஆறில் ஒரு பங்கு.

2) "பாரதியார் ஒரு அவதாரப் புருஷர். இவர் நூலைத் தமிழர் வேதமாகக் கொள்வார்களாக" - பரலி சு. நெல்லையப்பர்.

3) பாரதியின் புதுக்கவிதைக்கு முன்னோடியாக இருந்தவர் வால்ட்விட்மன்.

4) பாரதியின் புனைப்பெயர்களுள் ஒன்று சாவித்திரி.

A. 2, 3, 4 B. 1, 2, 3 C. 3, 4 D. இவையனைத்தும்

E. விடை தெரியவில்லை

94. தேனினும் இனி தீந்தமிழ் பனுவல் என்றழைக்கப்படும் நூல்

A. பெரியபுராணம் B. நாலாயிர திவ்ய பிரபந்தம் C. சேக்கிழார் பிள்ளைத்தமிழ்

D. திருவிளையாடற்புராணம் E. விடை தெரியவில்லை

95. கூற்று : சீவகசிந்தாமணி முக்தி நூல் என்று சிறப்பிக்கப்படுகிறது.

காரணம் : இளமை நிலையாமை, இன்ப நிலையாமை, செல்வ நிலையாமை பற்றி இந்நூல் எடுத்தியம்புகிறது.


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

A. கூற்று சரி காரணம் தவறு B. கூற்று தவறு காரணம் சரி C. கூற்று (ம) காரணம் சரி

D. கூற்று (ம) காரணம் தவறு E. விடை தெரியவில்லை

96. கீழ்க்காண்பனவற்றில் எவை எதிர்மறை இடைநிலைகள்.

A. அத்து, அற்று B. ஆ, அல், இல் C. இ, மல் D. கள், மார் E. விடை தெரியவில்லை

97. 1. சிறப்பு, ஐயம், எச்சம், முற்று போன்ற பொருள்களில் வருவது - 'உம்' எனும் இடைச்சொல்.

2. அழுத்தப் பொருளில் வரும் இடைச்சொல் - 'தான்'

3. வரையறைப் பொருளில் வரும் இடைச்சொல் - 'மட்டும்'

சரியானதைத் தேர்ந்தெடு.

A. 1, 2, 3 சரி B. 2 மட்டும் சரி C. 2, 3 சரி D. 1, 2 சரி E. விடை தெரியவில்லை

98. தவறானதைக் கண்டறிக.

1. கடி - ஒரு சொல் பல பொருளுக்கு வரும் உரிச்சொல்.

2. நனி - பல சொல் ஒரு பொருள் குறிக்கும் உரிச்சொல்.

3. உரிச்சொற்கள் செய்யுளுக்கே உரியன என தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

A. 1, 2, 3 தவறு B. 3 மட்டும் தவறு C. 1, 2 தவறு D. 2 மட்டும் தவறு

E. விடை தெரியவில்லை

99. உழுவார் உலகத்தார்க்கு ஆணி அ∴தற்றாது

எழுவாரை எல்லாம் பொறுத்து?

இக்குறளில் பயின்று வந்துள்ள அணி

A. உவமையணி B. உருவக அணி C. எடுத்துகாட்டு உவமையணி

D. ஏகதேச உருவக அணி E. விடை தெரியவில்லை

100. பாலை + திணை - இதில் உள்ள முதல், ஈற்று சொல்வகை.

A. மெய்யீறு, மெய்முதல் B. மெய்யீறு, உயிர்முதல் C. உயிரீறு, மெய்முதல்

D. உயிரீறு, உயிர்முதல் E. விடை தெரியவில்லை


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

## விடைக்குறிப்பு

| S.No | Ans | S.No | Ans | S.No | Ans | S.No | Ans | S.No | Ans |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | D | 21 | D | 41 | A | 61 | D | 81 | D |
| 2 | B | 22 | D | 42 | D | 62 | C | 82 | B |
| 3 | A | 23 | B | 43 | D | 63 | C | 83 | A |
| 4 | B | 24 | D | 44 | A | 64 | C | 84 | D |
| 5 | A | 25 | B | 45 | D | 65 | D | 85 | C |
| 6 | D | 26 | B | 46 | C | 66 | D | 86 | D |
| 7 | C | 27 | D | 47 | D | 67 | D | 87 | C |
| 8 | A | 28 | A | 48 | B | 68 | B | 88 | A |
| 9 | C | 29 | B | 49 | C | 69 | A | 89 | C |
| 10 | C | 30 | A | 50 | D | 70 | D | 90 | A |
| 11 | C | 31 | C | 51 | B | 71 | C | 91 | D |
| 12 | A | 32 | D | 52 | C | 72 | D | 92 | C |
| 13 | C | 33 | D | 53 | B | 73 | C | 93 | A |
| 14 | D | 34 | C | 54 | A | 74 | C | 94 | B |
| 15 | C | 35 | B | 55 | C | 75 | A | 95 | C |
| 16 | C | 36 | D | 56 | A | 76 | A | 96 | B |
| 17 | B | 37 | D | 57 | B | 77 | D | 97 | A |
| 18 | D | 38 | C | 58 | B | 78 | A | 98 | B |
| 19 | D | 39 | C | 59 | A | 79 | D | 99 | D |
| 20 | B | 40 | A | 60 | D | 80 | A | 100 | C |


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

## மாதிரித் தேர்வு - 2

1. கனவு என்னும் இலக்கிய இதழ்?

A) சுப்ரபாரதி மணியன் B) பி.ச. குப்புசாமி C) சிவக்குமார் D) சீரங்கராயன்

E) விடை தெரியவில்லை

2. தவறானது?

A) மொழிபெயர்ப்பும் ஒலிபெயர்ப்பும் - மணவை முஸ்தபா

B) தமிழர் நாகரிகமும் பண்பாடும் - அ. தட்சிணாமூர்த்தி

C) கையா, உலகே ஒரு உயிர் - ஜேம்ஸ் லவ்லாக்

D) கல்வியில் நாடகம் - மா. ராஜமாணிக்கனார்

E) விடை தெரியவில்லை

3. பொருத்துக.

a. மத்தளம் - 1. நல்லொலி

b. வீணை - 2. மீட்டொலி

c. புல்லாங்குழல் - 3. கான ஒலி

d. நாகசுரம் - 4. லயஒலி

A) 1 2 3 4 B) 2 1 4 3 C) 4 2 3 1 D) 4 3 2 1 E) விடை தெரியவில்லை

4. பொருத்துக. (எம்.ஜி.ஆர் பற்றியது)

a. 1962 - 1. சென்னை மாநிலச் சட்டமன்ற மேலவை உறுப்பினர்.

b. 1967 - 2. சட்டசபைத் தேர்தலில் பரங்கிமலைத் தொகுதியில் வெற்றி.

c. 1972 - 3. புதிய கட்சி தொடக்கம்

d. 1977 - 4. தமிழக முதல்வர்

A) 1 2 3 4 B) 2 1 3 4 C) 4 3 2 1 D) 3 4 2 1 E) விடை தெரியவில்லை

5. பொருத்தமற்ற கூற்றைக் காண்க. (ஐந்தாம் வேற்றுமை உருபுகளில் தவறானது)

A) சிலேடை பாடுவதில் வல்லவர் காளமேகம்.

B) தமிழ்நாட்டின் கிழக்கு வங்ககடல்.

C) செங்குட்டுவனுக்குத் தம்பி இளங்கோ.

D) தலையின் இழந்த மயிர்

E) விடை தெரியவில்லை

6. இரட்டைக்கிளவி போல் இணைந்தே வாழுங்கள் பிரித்தால் பொருளில்லை என்றவர் யார்?

A) முடியரசன் B) சுரதா C) வாணிதாசன் D) கண்ணதாசன் E) விடை தெரியவில்லை

7. பொருத்துக.

a. ஆ - 1. அம்பு

b. ஏ - 2. மதகுநீர்

c. ஐ - 3. பசு

d. ஓ - 4. தலைவன்

A) 3 1 4 2 B) 1 3 2 4 C) 3 2 4 1 D) 4 3 1 2 E) விடை தெரியவில்லை


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593
Padasalai.Net

8. கூற்றுகளை ஆராய்க. (அண்ணா)

1. எண்ணங்களைச் சொல்லும் முறையில் அழகுபடுத்துவதே அணி எனப்படும்.
2. மேடைப் பேச்சுக்கு கருத்துகளே உயிர்நாடி.

A) 1, 2 சரி B) 1 சரி C) 2 சரி D) 1, 2 தவறு E) விடை தெரியவில்லை

9. தவறான கூற்றைத் தேர்வு செய்க.

1. ஐரோப்பிய கலை நுணுக்கங்களுடன் இந்திய கதை மரபுகளை இணைத்து ஓவியங்களில் புதுமைகளைப் புகுத்தியவர் - கொண்டைராஜு
2. நாட்காட்டி ஓவியம் வரையும் முறையின் முன்னோடிகளுள் ஒருவராகக் கருதப்படுபவர் - ராஜாரவிவர்மா

A) 1, 2 சரி B) 1 சரி C) 2 சரி D) 1, 2 தவறு E) விடை தெரியவில்லை

10. கீழ்க்காணும் கூற்றுகளுக்கு பொருத்தமான ஆட்டத்தை தேர்வு செய்க.

1. அரசர், அரசி வேடமிட்டு ஆடப்படும் இவ்வாட்டம் புரவி ஆட்டம் / புரவி நாட்டியம் என்றழைக்கப்படுகிறது.
2. இது இராஜஸ்தானில் கச்சிக்கொடி என்னும் கேரளத்தில் குதிரைக்களி என்றும் அழைக்கப்படுகிறது.

A) தப்பாட்டம் B) பொய்க்கால் குதிரையாட்டம் C) புலிஆட்டம் D) தெருக்கூத்து

E) விடை தெரியவில்லை

11. பொருத்துக.

a. இமிழிசை - 1. பண்புத்தொகை
b. வாயில் - 2. வினைத்தொகை
c. குழா அத்து - 3. உரிச்சொல் தொடர்
d. மாகால் - 4. செய்யுளிசை அளபெடை
e. முந்நீர் - 5. இலக்கணப்போலி

A. 1 2 4 3 5 B. 2 5 4 1 3 C. 2 5 4 3 1 D. 2 4 5 3 1

E. விடை தெரியவில்லை

12. மகிழ்ந்தோர் - சரியான பகுபத உறுப்பிலக்கணம் காண்க.

A. மகிழ் + த் + ஓர் B. மகிழ்ந்து + ஓர் C. மகிழ் + த் + த் + ஓர்

D. மகிழ் + த் (ந்) + த் + ஓர் E. விடை தெரியவில்லை

13. எதிர்கால இடைநிலைகள் எவை?

A. ஆ, அல், இல் B. ப், வ், க் C. த், ட், ற், ன் D. க, இய, இயர்

E. விடை தெரியவில்லை

14. சரியான கூற்றைக் காண்க.

1. சொல்லின் முதலில் நின்று பகாப்பதமாய் அமைவது பகுதி எனப்படும்.
2. பகுதி, விகுதி, இடைநிலைகளைச் சார்ந்து வருவது சாரியை எனப்படும்.
3. பகுபத உறுப்புகளில் ஏற்படும் மாற்றமே விகாரம்.
4. பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் நின்று காலம் காட்டுவது இடைநிலை ஆகும்.

A. 1, 2 சரி 3, 4 தவறு B. அனைத்தும் சரி C. 1, 2, 4 சரி 3 தவறு D. 1, 4 சரி 2, 3 தவறு

E. விடை தெரியவில்லை

15. வேலன் நன்றாகப் படித்ததால் தேர்வில் முதல் மதிப்பெண் பெற்றான் - எவ்வகை வாக்கியம் எனச் சுட்டுக.


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

A. உணர்ச்சி வாக்கியம் B. உடன்பாட்டு வாக்கியம் C. தன்வினை வாக்கியம்

D. கலவை வாக்கியம் E. விடை தெரியவில்லை

16. 1) திருக்குறளில் இடம்பெற்றுள்ள ஒரே பழம் நெருஞ்சி.

2) திருக்குறளில் இடம்பெறாத ஒரே உயிரெழுத்து ஔ.

3) திருக்குறளில் இடம்பெற்றுள்ள மரங்களில் ஒன்று பிரம்பு.

4) திருக்குறளில் கோடி என்ற சொல் 7 இடங்களில் காணப்படுகிறது.

மேற்கூறியவற்றுள் சரியானது எது?

A. 1, 2 B. 2, 3 C. 1, 2, 4 D. இவையனைத்தும் E. விடை தெரியவில்லை

17. பொருத்துக.

a. மேதைக்கு உரையாமை செல்லும் உணர்வு - 1) சிறுபஞ்சமூலம்

b. விச்சைமற்று அல்ல பிற - 2) நாலடியார்

c. ஒன்றாகு முன்றிலோ இல் - 3) பழமொழி நானூறு

d. மனைக்கு விளக்கம் மடவாள் - 4) நான்மணிக்கடிகை

A. 2 1 3 4 B. 1 4 3 2 C. 4 1 3 2 D. 1 2 3 4 E. விடை தெரியவில்லை

18. பொருத்துக.

a. நிரையம் - 1) நரகம்

b. வறன் - 2) போர்

c. மதுகை - 3) வறுமை

d. சமர் - 4) பெருமிதம்

A. 2 3 1 4 B. 1 2 3 4 C. 4 3 2 1 D. 1 3 4 2 E. விடை தெரியவில்லை

19. சேக்கிழார் தனது பெரியபுராணத்தில் "வேதநெறி தழைத்தோங்க, மிகு சைவத்துறை விளங்க இவர் தோன்றினார்" என்று பாராட்டப்பெற்றவர்

A. சுந்தரர் B. திருஞானசம்பந்தர் C. அப்பர் D. மாணிக்கவாசகர்

E. விடை தெரியவில்லை

20. 'சாபவிமோசனம்', 'அகலிகை' கதைகளில் தொன்மங்களைப் பயன்படுத்தியவர்

A. கு. அழகிரிசாமி B. புதுமைப்பித்தன் C. ஜெயமோகன் D. எஸ். இராமகிருஷ்ணன்

E. விடை தெரியவில்லை

21. நாலாயிர திவ்ய பிரபந்தம் பற்றிய கூற்றுகளுள் சரியானது?

1) அருந்தமிழ் பனுவல் என்றழைக்கப்படும் நாலாயிர திவ்ய பிரபந்தத்தின் சிறப்புப் பெயர் திராவிட சாகரம்.

2) இதனை தொகுத்தவர் நம்பியாண்டார் நம்பி.

3) இதில் 105 பாசுரங்கள் மற்றும் 3776 பாடல்கள் உள்ளன.

4) நம்மாழ்வார் திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி மற்றும் பெருமாள் திருமொழி ஆகிய நூல்களை இயற்றியுள்ளார்.

A. 1, 2, 3 B. 1, 3 C. 1, 2, 4 D. இவையனைத்தும் E. விடை தெரியவில்லை


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

22. கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியானது எது (சீவகசிந்தாமணி)

1) சீவகசிந்தாமணிக்கு நிகரான கவிதை நீலகேசி என்பர்.

2) இந்நூல் நாமகள் இலம்பகம் முதல் முக்தி இலம்பகம் வரை 13 இலம்பகங்களையும், 3145 பாடல்களையும் கொண்டது.

3) விருத்தப்பாவால் இயற்றப்பட்ட முதல் காப்பியம்.

4) தமிழ் கவிஞர்களின் அரசன் என திருத்தக்க தேவரை புகழ்ந்தவர் ஜி.யு.போப்.

A. 2, 3 B. 1, 2, 3 C. 1, 3 D. 1, 2, 3, 4 E. விடை தெரியவில்லை

23. பொருத்துக.

a. வீரகாவியம் - 1. நா. காமராசன்

b. இயேசு காவியம் - 2. சிற்பி பாலசுப்ரமணியம்

c. ஒளிப்பறவை - 3. கண்ணதாசன்

d. சகாராவைத் தாண்டாத ஒட்டகங்கள் - 4. முடியரசன்

A. 4 3 2 1 B. 3 2 1 4 C. 2 1 4 3 D. 1 2 3 4 E. விடை தெரியவில்லை

24. நற்றிணை தொடர்பான கூற்றுகளுள் சரியானது?

1) இதன் அடி வரையறை 9 முதல் 12 வரை. விதிவிலக்காக 13 அடிகளை கொண்ட பாடலை இயற்றியவர் போதனார்.

2) இது திருமாலை கடவுள் வாழ்த்தாக கொண்ட நூல். மேலும் வௌவால்களும் கனவு காணும் என்ற அறிவியல் உண்மையைக் கூறுகிறது.

3) எட்டுத்தொகை நூல்களுள் "நல்" என்ற அடைமொழியுடன் குறிப்பிடப்படும் நூல்.

4) இது 275 புலவர்கள் பாடிய 400 பாடல்களைக் கொண்ட நூல்.

A. 1, 2, 4 B. 2, 3 C. 1, 4 D. இவையனைத்தும் E. விடை தெரியவில்லை

25. பாண்டியன் கல்லைக்கட்டி வைகையில் இட்டபோது கோபமுற்று வைகையில் வெள்ளப்பெருக்கை ஏற்படுத்தியவர்

A. தம்பிரான் தோழர் B. பரசமய கோளரி C. தென்னவன் பிரம்மராயன்

D. தாண்டக வேந்தர் E. விடை தெரியவில்லை

26. பொருத்துக.

a. மல்லி - 1. தோகை

b. சப்பாத்திக்கள்ளி, தாழை - 2. தழை

c. கரும்பு, நாணல் - 3. மடல்

d. பனை - 4. ஓலை

A) 4 3 2 1 B) 1 2 3 4 C) 2 3 1 4 D) 1 3 2 4 E) விடை தெரியவில்லை

27. பொருத்துக.

a. வெள்ளம் - 1. பதிற்றுப்பத்து

b. கோடை, மருந்து - 2. தொல்காப்பியம், திருக்குறள்

c. மகிழ்ச்சி - 3. அகநானூறு

d. பார் - 4. பெரும்பாணாற்றுப்படை


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

A) 1 3 2 4 B) 1 2 3 4 C) 4 3 2 1 D) 3 4 2 1 E) விடை தெரியவில்லை

28. கூற்றுகளை ஆராய்க.

1. வட்டெழுத்து என்பது வளைந்த கோடுகளால் அமைந்த மிகப்பழைய தமிழ் எழுத்து ஆகும்.

2. தமிழெழுத்து என்பது இக்காலத்தில் எழுதப்படும் தமிழ் எழுத்துக்களின் பழைய வரி வடிவமாகும்.

3. கடைச்சங்க காலத்தில் தமிழகத்தில் எழுதப்பட்ட எழுத்து கண்ணெழுத்து என மணிமேகலை கூறுகிறது.

A) 1, 3 சரி 2 தவறு B) 2, 3 சரி 1 தவறு C) 1, 2 சரி 3 தவறு D) 1, 2 தவறு 3 சரி

E) விடை தெரியவில்லை

29. கூற்றுகளை ஆராய்க.

1. ஓரெழுத்து ஒரு மொழி 42 என்கிறார் பவணந்தி முனிவர்.

2. இதில் நொ, து என்னும் குறில் எழுத்தும் அடங்கும்.

A) 1 சரி B) 2 சரி C) 1, 2 சரி D) 1, 2 தவறு E) விடை தெரியவில்லை

30. கூற்றிற்கு பொருத்தமானவர்?

1. செந்தமிழ் அந்தணர்.

2. தேவநேயம் என்ற நூலை தொகுத்தவர்.

A) திரு.வி.க B) தேவநேயப் பாவணர் C) இளங்குமரனார் D) மு.வ.

E) விடை தெரியவில்லை

31. கூற்றுகளை ஆராய்க.

1. வில்லியம் ஜோன்ஸ் - வடமொழியை ஆராய்ந்து மற்ற ஐரோப்பிய மொழிகளோடு தொடர்புடையது வடமொழி என முதன் முதலில் குறிப்பிட்டார்.

2. குமரிலப்பட்டர் - திராவிடம் என்ற சொல்லை முதலில் குறிப்பிட்டவர்.

A) 1, 2 சரி B) 1 சரி C) 2 சரி D) 1, 2 தவறு E) விடை தெரியவில்லை

32. கூற்றுகளில் தவறானது

A) தமிழே மிகவும் பண்பட்ட மொழி - கமில்சுவலபில்

B) "தமிழ் இலக்கணம் படிக்கப் படிக்க விருப்பத்தை உண்டாக்கும்' - கெல்லட்

C) "என்றுமுள தென் தமிழ்" - கம்பர்

D) "இன்றைய மொழியியல் வல்லுநர்கள் பேணிப" பின்பற்றத்தக்க வழிமுறைகளைத் தொல்காப்பியம் கூறுகிறது - எமினோ

E) விடை தெரியவில்லை

33. கூற்றுகளில் தவறானது.

A) 1918 - மேலைச்சிவபுரிச் சன்மார்க்க சபை தமிழைச் செம்மொழியாக அறிவிக்க தீர்மானம் நிறைவேற்றியது

B) 1917 - சைவ சித்தாந்த மாநாட்டில் தமிழைச் செம்மொழியாக அறிவிக்க தீர்மானம் நிறைவேற்றியது.

C) 1919 - கரந்தைத் தமிழ்ச்சங்கம் தமிழைச் செம்மொழியாக அறிவிக்க தீர்மானம் நிறைவேற்றியது.

D) 1966 - உயர்தனிச் செம்மொழி என்னும் ஆங்கிலநூல் தேவநேயப் பாவாணரால் எழுதி வெளியிடப்பட்டது.

E) விடை தெரியவில்லை

34. மறைமலையடிகளின் நூல்களில் தவறானது?

A) அம்பிகாவதி அமராவதி B) குமுதவல்லி C) மானவிஜயம் D) யோக நித்திரை


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

E) விடை தெரியவில்லை

35. கீழ்க்காணும் கூற்றுகளுக்கு பொருத்தமான நபர்?

1. சித்திரகவி எழுதும் ஆற்றல் பெற்றிருந்ததால் "சித்திரகவி" என்ற நூலை எழுதினார்.

2. குமரகுருபரரின் நீதிநெறி விளக்கத்தின் 51 பாடல்களுக்கு உரை எழுதியுள்ளார்.

A) திரு.வி.க B) மறைமலையடிகள் C) பரிதிமாற்கலைஞர் D) பாரதியார்

E) விடை தெரியவில்லை

36. பொருத்தமான உரிச்சொற்களை எழுதுக.

1. .................... பெரும் பொதுக்கூட்டம்.

2. ..................... நுதல்.

3. ..................... சிறந்தது.

4. ..................... மனை.

(மா, தவ, சால, கடி)

A. 1 2 3 4 B. 4 3 2 1 C. 1 3 4 2 D. 1 3 2 4 E. விடை தெரியவில்லை

37. தவறான கூற்று காண்க.

1. பொருளிலக்கணம் அகம், புறம் என இருவகைப்படும்.

2. அகத்திணைகள் ஏழு வகை என தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

3. அகப்பொருள்களுக்குரிய பொருட்கள் நான்கு வகைப்படும்.

4. புறத்திணைகள் 12 என புறப்பொருள் வெண்பாமாலை குறிப்பிடுகிறது.

A. 4 மட்டும் தவறு B. 3 மட்டும் தவறு C. 2 மட்டும் தவறு D. இவற்றில் எதுவுமில்லை

E. விடை தெரியவில்லை

38. பொருத்துக.

| ஊர் | சேதம் |
|---|---|
| a. வாங்கல் | - 1. பருத்திச்செடி |
| b. காங்கேயம் | - 2. தென்னம்பிள்ளை |
| c. தொண்டை மண்டலம் | - 3. மரங்கள் |
| d. கடலின் கப்பல் | - 4. புயல் அடித்தது |
| e. சித்தர்-கொல்லிமலை | - 5. எமனைப்போல் பெருமழை சூழல் காற்று வீசியது |

A. 2 1 3 5 4 B. 2 3 1 4 5 C. 1 3 4 2 5 D. 5 4 3 2 1 E. விடை தெரியவில்லை

39. 1. கவிதை இயற்றும் முறைகளை கூறும் இலக்கணமே யாப்பிலக்கணம் ஆகும்.

2. யாப்பின் அடிப்படை எழுத்துகள் 6 வகைப்படும்.

3. யாப்பின் உறுப்புகள் மூன்று வகைப்படும்.

தவறான கூற்றைக் காண்க.

A. 1 மட்டும் தவறு B. 2 மட்டும் தவறு C. 2, 3 தவறு D. அனைத்தும் தவறு

E. விடை தெரியவில்லை


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

40. பொருத்துக.

a. அசை - 1. 2 வகைகள்

b. சீர் - 2. 8 வகைகள்

c. தளை - 3. 4 வகைகள்

d. அடி - 4. 7 வகைகள்

e. தொடை - 5. 5 வகைகள்

A. 1 3 4 5 2 B. 1 3 5 4 2 C. 1 5 3 4 2 D. 2 3 4 1 5 E. விடை தெரியவில்லை

41. பொருத்துக.

a. சாதியும், நிறமும் அரசியலுக்கும் இல்லை, ஆன்மீகத்துக்கும் இல்லை என்றவர் - 1. கடுவெளிச் சித்தர்

b. அறிவு என்பது வளர்ந்து கொண்டே இருக்கும் எனவே, புதியனவற்றை ஏற்றல் வேண்டும் என்றவர் - 2. ஜவஹர்லால் நேரு

c. பிறர் தாழும்படிக்கு நீ தாழ்வைப் பண்ணாதே என்றவர் - 3. பசும்பொன் முத்துராமலிங்கர்

d. ஆயிரம் முகங்கள் கொண்ட வாழ்க்கையைப் புரிந்துகொள்ளவும், முறையாக வாழவும் புத்தகப் படிப்பு இன்றியமையாதது என்றவர் - 4. தந்தை பெரியார்

A. 1 2 4 3 B. 3 4 1 2 C. 2 3 1 4 D. 4 2 3 1 E. விடை தெரியவில்லை

42. சரியான இணையைத் தேர்ந்தெடு.

1) பெரிய திருமொழி - திருமங்கை ஆழ்வார் பாடல்கள்

2) திருவாய் மொழி - நம்மாழ்வார் பாடல்கள்

3) முதல் ஆயிரத்தில் ஒன்று - பெருமாள் திருமொழி

A. அனைத்தும் சரி B. 1, 2 C. 1, 3 D. 2, 3 E. விடை தெரியவில்லை

43. "நற்கலை" என்று அழைக்கப்படும் கலை

A. கட்டடக்கலை B. சிற்பக் கலை C. ஓவியக் கலை D. அழகுக் கலை

E. விடை தெரியவில்லை

44. "இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால் என்ன பயந்ததோ சால்பு" என்னும் குறட்பா அமைந்துள்ள அதிகாரம்

A. சான்றாண்மை B. இன்னா செய்யாமை C. தெரிந்து செயல்வகை

D. ஒழுக்கமுடைமை E. விடை தெரியவில்லை

45. 'தமிழ்வேலி' என்று மதுரைத் தமிழ்ச்சங்கத்தினைக் கூறிய நூல்

A. பரிபாடல் B. புறநானூறு C. திருவாசகம் D. தேவாரம் E. விடை தெரியவில்லை

46. ஐங்குறுநூறு நூலைத் தொகுப்பித்தவர் யார்?

A. புலத்துறை முற்றிய கூடலூர் கிழார் B. பன்னாடு தந்த மாறன் வழுதி

C. பாரதம் பாடிய பெருந்தேவனார் D. யானைக் கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை

E. விடை தெரியவில்லை


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

47. பொருத்துக.

a. கான் - 1. கரடி

b. உழுவை - 2. சிங்கம்

c. மடங்கல் - 3. புலி

d. எண்கு - 4. காடு

A. 4 3 2 1 B. 4 3 1 2 C. 3 4 1 2 D. 3 4 2 1 E. விடை தெரியவில்லை

48. "மீன்நோக்கும் நீள்வயல் சூழ் வித்துவக்கோட் டம்மாஎன்
பானோக்கா யாகிலுமுன் பற்றல்லால் பற்றில்லேன்" என்னும் பாடலடிகளை இயற்றியவர்

A. பொய்கை ஆழ்வார் B. பூதத்தாழ்வார் C. பேயாழ்வார் D. குலசேகர ஆழ்வார்

E. விடை தெரியவில்லை

49. பொருத்துக.

a. தெங்கு - 1) யாழ் நரம்பை இழுத்துக் கட்டும் கருவி

b. வெற்றம் - 2) மணம்

c. மாடகம் - 3) தேங்காய்

d. வெறி - 4) வெற்றி

A. 2 3 4 1 B. 1 2 3 4 C. 3 1 4 2 D. 3 4 1 2 E. விடை தெரியவில்லை

50. பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்.

A. உவமை அணி B. வேற்றுமை அணி C. பிறிதுமொழிதல் அணி

D. ஏகதேக உருவக அணி E. விடை தெரியவில்லை

51. அகநானூற்றில் 6, 16 என்ற எண்களாக வரும் திணை

A) பாலை B) குறிஞ்சி C) நெய்தல் D) மருதம் E) விடை தெரியவில்லை

52. கூற்றுகளை ஆராய்க. (திரு.வி.க)

1. "எங்கும் தமிழ் எதிலும் தமிழ்"

2. அண்ணாவின் முன்னோடி

3. படுக்கை பிதற்றல் என்னும் நூலை வ.ரா -வின் உதவியுடன் எழுதி முடித்தார்.

A) 1, 2, 3 சரி B) 1, 2 சரி C) 2 சரி D) 2, 3 சரி E) விடை தெரியவில்லை

53. ரா.பி. சேதுப்பிள்ளை நூல்களில் தவறானது?

A) செந்தமிழும் கொடுந்தமிழும் B) வேலும் வில்லும் C) உரிமை வேட்கை

D) கால்டுவெல் ஐயர் சரிதம் E) விடை தெரியவில்லை

54. "இமயம் எங்கள் காலடியில்" என்ற கவிதைத் தொகுப்பு யாருடையது?

A) சாலினி இளந்திரையன் B) ஞானக்கூத்தன் C) ஆலந்தூர் மோகனரங்கன்

D) சாலை இளந்திரையன் E) விடை தெரியவில்லை

55. பொருத்துக. (உ.வே.சா பதிப்பித்த நூல்கள்)

a. அந்தாதி - 1. 13

b. பரணி - 2. 12


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

c. புராணங்கள் - 3. 3

d. வெண்பா நூல்கள் - 4. 2

A) 1 2 3 4 B) 3 4 2 1 C) 1 3 2 4 D) 4 3 2 1 E) விடை தெரியவில்லை

56. "திருவள்ளுவர் தோன்றியிராவிட்டால், தமிழன் என்னும் ஓர் இனம் இருப்பதாக உலகத்தார்க்குத் தெரிந்திருக்காது" என்று கூறியவர்

A) கி.ஆ.பெ. விசுவநாதம் B) திரு.வி.க C) ஔவையார் D) மணக்குடவர்

E) விடை தெரியவில்லை

57. 'நான்' என்பது நான்காம் வேற்றுமை உருபு பெற்றால் ........................ என ஆகும்.

A) என்னை B) என்னால் C) எனக்கு D) நின்னை E) விடை தெரியவில்லை

58. தமிழ் எண் கணக்கைத் தீர்க்க.

ஙஅ + க0 = ......................

A) ருஅ B) சஅ C) சாஅ D) எஅ E) விடை தெரியவில்லை

59. செய்யுள் அடிகளை முன்பின்னாக மாற்றினாலும் பொருளும் ஓசையும் சிதையாமல் வருவது

A) கொண்டு கூட்டுப் பொருள்கோள் B) அளைமறி பாப்புப் பொருள்கோள்

C) மொழி மாற்றுப் பொருள்கோள் D) அடிமறி மாற்றுப் பொருள்கோள்

E) விடை தெரியவில்லை

60. கீழ்க்காணும் கூற்றுகளில் தவறானது (இளையராஜா)

A) "ராஜாவின் ரமணமாலை", "இளையராஜாவின் கீதாஞ்சலி" என்னும் தமிழ் இசைத்தொகுப்புகளை வெளியிட்டார்.

B) கன்னட மொழியில் "மூகாம்பிகை" என்ற பக்தி இசைத் தொகுப்பினை வெளியிட்டார்.

C) பஞ்சமுகி என்ற கர்நாடகச் செவ்வியல் இராகம் அவர் உருவாக்கியதாகும்.

D) திருமூலரின் திருமந்திரப் பாடல்களுக்கு ஆரட்டோரியோ என்னும் இசை வடிவில் இசையமைத்துள்ளார்.

E) விடை தெரியவில்லை

61. 1. ஈரசைசீருக்கு இயற்சீர், உரிச்சீர் எனும் வேறு பெயர்களும் உண்டு.

2. காய்ச்சீர்களை "வெண்சீர்கள்" என அழைக்கிறோம்.

3. தளைகளில் இயற்சீர், வெண்சீர் மட்டுமே வரும்.

சரியானதை கண்டறிக.

A. 1, 2 சரி 3 தவறு B. 1, 2, 3 சரி C. 1, 3 சரி 2 தவறு D. எதுவுமில்லை

E. விடை தெரியவில்லை

62. கொண்டல் கோபுரம் அண்டையில் கூடும்

கொடிகள் வானம் படிதர மூடும்.

இப்பாடலில் பயின்று வரும் தொடை நயங்களை எழுதுக.

A. மோனை, அந்தாதி B. மோனை, இயைபு C. மோனை, எதுகை D. எதுகை, இயைபு

E. விடை தெரியவில்லை

63. அறம் நாணத் - இதன் அலகிட்டு வாய்பாடு கூறுக.

A. தேமா B. புளிமாங்காய் C. கூவிளம் D. தேமாங்காய் E. விடை தெரியவில்லை


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

64. பொருத்துக.

a. இயற்சீர் வெண்டளை - 1. கனி முன் நேர்

b. கலித்தளை - 2. மா முன் நேர்

c. ஒன்றிய வஞ்சித்தளை - 3. கனி முன் நிரை

d. ஒன்றா வஞ்சித்தளை - 4. விளம் முன் நேர்

e. நேரொன்றிய ஆசிரியத்தளை - 5. காய் முன் நிரை

A. 1 2 3 4 5 B. 5 4 3 2 1 C. 4 5 3 1 2 D. 4 3 5 2 1 E. விடை தெரியவில்லை

65. முன் வந்த சொல்லே பின்னும் பலவிடத்தும் வந்து வேறு பொருள் உணர்த்துவது ....................

A. பின்வருநிலையணி B. சொல் பின்வருநிலையணி C. பொருள் பின்வருநிலையணி

D. சொற்பொருள் பின்வருநிலையணி E. விடை தெரியவில்லை

66. சைவ வைணவங்களை ஒருங்கிணைக்கும் இலட்சியங்கொண்ட நூல்

A. காவடிச்சிந்து B. முக்கூடற்பள்ளு C. திருக்குற்றாலக் குறவஞ்சி

D. நந்திக் கலம்பகம் E. விடை தெரியவில்லை

67. "மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத

முத்துடைத்தாமம் நிரைதாழ்ந்த பந்தற்கீழ்" எனும் பாடலடிகள் இடம்பெற்றுள்ள நூல்

A. திருப்பாவை B. பெருமாள் திருமொழி C. நாச்சியார் திருமொழி

D. பெரியபுராணம் E. விடை தெரியவில்லை

68. இன்பங்களைத் துறந்து துறவு பூண வேண்டும் என்பதே இதன் மையக்கருத்து

A. மணிமேகலை B. உதயணகுமார காவியம் C. குண்டலகேசி D. சீவகசிந்தாமணி

E. விடை தெரியவில்லை

69. பொருத்துக.

a. பாம்போடு உடன் உறைந்தற்று - 1. தீக்காய்வார்

b. செத்தார் - 2. சீர் அழிக்கும் சூது

c. வறுமை தருவது - 3. கள் உண்பவர்

d. இகல்வேந்தர் சேர்ந்து ஒழுகுவார் - 4. உடம்பாடு இலாதவர்

A. 1 2 3 4 B. 2 3 4 1 C. 4 1 3 2 D. 4 3 2 1 E. விடை தெரியவில்லை

70. 1) கூன்பாண்டியனை நின்றசீர் நெடுமாறனாக மாற்றியவர் திருஞானசம்பந்தர்.

2) திருஞானசம்பந்தர் தன்னைத் தானே "தமிழ் ஞானசம்பந்தன்" என அழைத்துக் கொண்டார்.

3) மதுரையில் அனல்வாதம், புனல்வாதம் செய்து சமணர்களை தோற்கடித்தவர் ஆணை நமதென்ற பெருமான்.

4) திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் சந்தித்த இடம் திருப்புகலூர்.

மேற்காணும் கூற்றுகளுள் சரியானது எது?

A. 1, 2, 3 B. 2, 3, 4 C. 1, 4 D. இவையனைத்தும் E. விடை தெரியவில்லை

71. "சேரி மொழியாற் செவ்விதிற் கிளந்து

தேர்தல் வேண்டாது குறித்தது தோன்றிற்

புலனென மொழிப புலனுணர்ந் தோரே" என்னும் தொல்காப்பியத்தில் குறிப்பிடப்படும் புலன் என்னும் இலக்கிய வகை சார்ந்த நூல்


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

A. திருக்குற்றாலக் குறவஞ்சி B. காவடிச்சிந்து C. நந்திக்கலம்பகம்
D. முக்கூடற்பள்ளு E. விடை தெரியவில்லை

72. பொருத்துக.

a. அன்பு - 1) நெய்
b. ஆர்வம் - 2) விளக்கு
c. சிந்தை - 3) இடுதிரி
d. ஞானம் - 4) சுடர் விளக்கு

A. 2 3 1 4 B. 1 2 3 4 C. 4 1 3 2 D. 2 1 3 4 E. விடை தெரியவில்லை

73. பொருந்தாத இணையைத் தேர்ந்தெடு.

1) காந்தருவதத்தையின் தோழி - வீணாதிபதி
2) சீவகனுக்கு மாலை சூட்டியவர் - காந்தருவதத்தை
3) சீவகனின் ஆசிரியர் - வீணாதிபதி
4) சீவகனின் நண்பன் - நகுலன்

A. 1, 4 B. 3 C. 1 D. 2, 4 E. விடை தெரியவில்லை

74. பரிபாடல் பற்றிய கூற்றுகளுள் சரியானது எது?

1) சங்க நூல்களுள் பண்ணோடு பாடப்பட்ட நூலில் 24 பாடல்களே நமக்குக் கிடைத்துள்ளன.
2) இந்நூலின் சிறப்புப் பெயர் பொருட்கலவை நூல். மேலும் இதனை ஓங்கு பரிபாடல் என்று சிறப்பித்து கூறுவர்.
3) கின்று என்று காலம் காட்டும் இடைநிலை முதன்முதலில் பரிபாடலில் தான் காணப்படுகிறது.
4) தெய்வங்கள் அடிப்படையில் பகுப்பு முறை அமைந்த ஒரே தொகைநூல் இதுவே.

A. அனைத்தும் சரி B. 2, 3, 4 C. 1, 3, 4 D. 1, 4 E. விடை தெரியவில்லை

75. கடற்பயணத்தின் சிறப்பை - அதை விளக்கும் நூலோடு பொருத்துக.

a. விளைந்து முதிர்ந்த விழுமுத்து - 1. பட்டினப்பாலை
b. பொன்னுக்கு ஈடாக மிளகு ஏற்றுமதி - 2. புறநானூறு
c. காற்றின் போக்கையறிந்து கலம் செலுத்தினர் - 3. மதுரைக்காஞ்சி
d. கட்டுத்தறியில் கட்டியய ானை அசைவது போல் நாவாய் அசைந்தது - 4. அகநானூறு

A. 4 3 2 1 B. 3 4 2 1 C. 1 2 4 3 D. 3 4 1 2 E. விடை தெரியவில்லை

76. கீழ்க்காணும் கூற்றுகளில் தவறானது.

A) புதுக்கவிதை - பாரதி B) சமுதாயப் புரட்சி - பாரதிதாசன்
C) பொதுவுடைமை - திரு.வி.க D) எதுவும் இல்லை
E) விடை தெரியவில்லை

77. ‘பாட்டினில் நெஞ்சைப் பறிகொடுத்த பாவியேன்’’ என்று கூறியவர்?

A) பாரதிதாசன் B) பாரதியார் C) நாமக்கல் கவிஞர் D) பகுத்தறிவுக்கவிராயர்
E) விடை தெரியவில்லை


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

78. பின்வரும் கூற்றுகளை ஆராய்க.

1) தமிழை வளர்க்க வேண்டும் என்றால் பிறமொழியை வெறுக்க வேண்டும் என்பது பொருளன்று - திரு.வி.க

2) தமிழ் மொழியை வடமொழி வல்லாண்மையினின்றும் மீட்பதற்காகவே இறைவன் என்னைப் படைத்தான் என்று கூறியவர் - தேவநேயப்பாவாணர்

3) ஆறுமுகநாவலரை "வசன நடை கைவந்த வள்ளாலர் எனப் பாராட்டியவர் - பரிதிமாற்கலைஞர்

A) 1, 2 சரி 3 தவறு B) 1, 3 சரி 2 தவறு C) 2, 3 சரி 1 தவறு D) அனைத்தும் சரி

E) விடை தெரியவில்லை

79. நாமக்கல் கவிஞரின் மேற்கோள்களில் தவறானது?

A) அன்பே அவனுடை வழியாகும் B) தமிழன் என்றோர் இனமுண்டு

C) பாட்டாளி மக்கள் பசிதீர வேண்டும் D) தருமத்தின் வாழ்வுதனைச் சூது கவ்வும்

E) விடை தெரியவில்லை

80. "சுப்புரத்தினம் ஓர் கவி" என்று கூறியவர்

A) வள்ளலார் B) திரு.வி.க C) பாரதியார் D) ரா.பி. சேதுபிள்ளை

E) விடை தெரியவில்லை

81. உவமை, உவமேயம் என்னும் இரண்டும் ஒன்றே என்று தோன்றக் கூறுவது

A. உவமையணி B. உருவக அணி C. பின்வருநிலையணி D. எடுத்துக்காட்டு உவமையணி

E. விடை தெரியவில்லை

82. பொருத்தமான வாய்பாடுகளை வட்டமிடுக.

1. மலர்ச்சி - 1. தேமாங்காய்
2. தாவோவியம் - 2. புளிமா
3. வெற்றிடம் - 3. தேமாங்கனி
4. பூங்குட்டி - 4. கூவிளம்

A. 1 2 3 4 B. 4 3 2 1 C. 2 3 4 1 D. 2 1 4 3 E. விடை தெரியவில்லை

83. எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்கு
பொய்ய விளக்கே விளக்கு . - அணியைக் கூறுக.

A. பொருள் பின்வருநிலையணி B. சொல் பின்வருநிலையணி C. சொற்பொருள் பின்வருநிலையணி

D. வஞ்சப்புகழ்ச்சி அணி E. விடை தெரியவில்லை

84. பொருத்தமற்றதை கண்டறிக.

A. மனிதம் - Humane B. உவமையணி - Simile C. உருவக அணி - Free verse

D. ஆளுமை - Personality E. விடை தெரியவில்லை

85. பொருத்துக.

a. சிற்பியின் மகள் - 1. பக்தவத்சல பாரதி
b. பெரியாரின் சிந்தனைகள் - 2. பூவண்ணன்
c. தமிழர் பழமொழிகள் - 3. வே. ஆனைமுத்து
d. தமிழர் உணவு - 4. கி.வா. ஜெகன்நாதன்

A. 2 3 4 1 B. 2 4 3 1 C. 1 2 3 4 D. 4 3 2 1 E. விடை தெரியவில்லை


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

86. முக்கூடற்பள்ளு பற்றிய கூற்றுகளுள் சரியானது எது?

1) இந்நூல் சிந்தும் விருத்தமும் பரவிவர பாடப்பட்டுள்ளது.

2) திருநெல்வேலிக்கு வடகிழக்கில் தண்பொருநை, சிற்றாறு, கோதண்டராம ஆறு ஆகியன சங்கமிக்கும் இடமே ஆசூர் வடகரை நாடு.

3) குயவர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளை சுவை பெறச் சொல்லும் சிற்றிலக்கியம்.

4) இந்நூலின் காலம் 17 ஆம் நூற்றாண்டு.

A. 1, 2, 3 B. 1, 2, 4 C. 2, 3, 4 D. இவையனைத்தும் E. விடை தெரியவில்லை

87. பாஞ்ச சன்யம் என்னும் சங்கின் அம்சமாக கருதப்படுபவர்

A. நம்மாழ்வார் B. பொய்கையாழ்வார் C. பூதத்தாழ்வார் D. பேயாழ்வார்

E. விடை தெரியவில்லை

88. தவறான இணையைத் தேர்ந்தெடு.

A. சமவெளி - Thicket

B. பள்ளத்தாக்கு - Valley

C. மலைமுகடு - Ridge

D. சிறுத்தை - Leopard

E. விடை தெரியவில்லை

89. பொருத்துக.

| நூல் | நூலாசிரியர் |
|---|---|
| a. நீங்களும் விளையாடலாம் | - 1. கி.வா. ஜகந்நாதன் |
| b. படைப்புக்கலை | - 2. மு. சுதந்திரமுத்து |
| c. கவிஞராக | - 3. சி.மணி |
| d. இதுவரை | - 4. அ.கி.பரந்தாமனார் |

A. 4 3 2 1 B. 1 3 4 2 C. 3 4 2 1 D. 1 2 4 3 E. விடை தெரியவில்லை

90. “அன்பே சிவமாவது யாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே” என்னும் பாடலை இயற்றியவர்

A. அப்பர் B. திருமூலர் C. திருஞானசம்பந்தர் D. மாணிக்கவாசகர்

E. விடை தெரியவில்லை

91. ராஜம் கிருஷ்ணன் பற்றிய கூற்றுகளுள் சரியானதைத் தேர்ந்தெடு.

1) உப்பளத் தொழிலாளர்களின் உவர்ப்பு வாழ்க்கை - கரிப்பு மணிகள்.

2) கடலோர மீனவர் வாழ்வின் சிக்கல்களைப் பேசுவது - அலைவாய்க் கரையில்.

3) பெண்குழந்தைக் கொலைக்கான காரணங்களை ஆராய்ந்து எழுதியது - கூட்டுக் குஞ்சுகள்.

A. 1, 2 மட்டும் B. 2, 3 மட்டும் C. 1, 3 மட்டும் D. 1, 2, 3

E. விடை தெரியவில்லை

92. நாராயணனைப் பாடும் வாயால் நரனைப் பாடேன் என்று கூறியவர்

A. பேயாழ்வார் B. நம்மாழ்வார் C. மதுரகவி ஆழ்வார் D. திருமழிசையாழ்வார்

E. விடை தெரியவில்லை


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

93. பொருத்துக.

a. எழுதிய கடிதம் - 1) குறிப்புப் பெயரெச்சம்

b. சிறிய கடிதம் - 2) தெரிநிலை பெயரெச்சம்

c. எழுதி வந்தான் - 3) தெரிநிலை வினையெச்சம்

d. மெல்ல வந்தான் - 4) குறிப்பு வினையெச்சம்

A. 2 1 3 4 B. 3 1 4 2 C. 1 2 3 4 D. 1 2 4 3 E. விடை தெரியவில்லை

94. மலைபடுகடாம் பற்றிய கூற்றுகளுள் தவறானது எது?

1) 583 அடிகளைக் கொண்ட இந்நூல் கூத்தராற்றுப்படை எனவும் அழைக்கப்படுகிறது.

2) பண்டைய இசைக் கருவிகளைப் பற்றி மிகுதியாகக் கூறும் இந்நூலின் பாட்டுடைத் தலைவன் தொண்டைமான் இளந்திரையன்.

3) ஆற்றுப்படை நூல்களுள் அடி அளவால் சிறியது.

4) சிவபெருமானை காரி உண்டிக் கடவுள் எனக் கூறும் நூல்.

A. 1, 4 B. 1, 3, 4 C. 2, 3, 4 D. 2, 3 E. விடை தெரியவில்லை

95. சரியான இணையைக் கண்டறிக.

1) இராமனுக்கு தாலாட்டு பாடியவர் - குலசேகர ஆழ்வார்

2) குலசேகரன் படியை கட்டியவர் - கூடல் நாயகன்

3) திருமூலர் முக்திபெற்ற இடம் - திருவாவடுதுறை

4) ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெருஞ்சோதி - மாணிக்கவாசகர்

A. 1, 3 B. 2, 4 C. 1, 2, 3 D. இவையனைத்தும் E. விடை தெரியவில்லை

96. பொருத்துக.

a. உயிரொலி - 1. Vowel

b. மெய்யொலி - 2. Consonant

c. மூக்கொலி - 3. Nasal Consonant

d. ஒலிப்பிறப்பியல் 4. Articulatory Phonetics

A. 1 2 3 4 B. 4 3 2 1 C. 3 4 1 2 D. 1 3 4 2 E. விடை தெரியவில்லை

97. கூற்றை ஆராய்க.

1. ஒரு செயலைச் செய்யுமாறு ஏவும் வினைமுற்று ஏவல் வினைமுற்று.

2. வாழ்த்துதல், வைதல், விதித்தல், வேண்டல் பொருளில் வரும் வினைமுற்று குறிப்பு வினைமுற்று.

A. 1, 2 சரி B. 2 மட்டும் தவறு C. 1 மட்டும் தவறு D. இவற்றில் எதுவுமில்லை

E. விடை தெரியவில்லை

98. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு.

1. இருதிணை, ஐம்பால், மூவிடங்களுக்கும் வரும்.

2. விகுதி பெற்றே வரும்.

3. ஒருமை, பன்மை வேறுபாடு இல்லை.

A. ஏவல் வினைமுற்று B. தெரிநிலை வினைமுற்று C. குறிப்பு வினைமுற்று

D. வியங்கோள் வினைமுற்று E. விடை தெரியவில்லை


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

99. கடல் ஓடா கால்வல் நெடுந்தேர் கடல்ஓடும்
நாவாயும் ஓடா நிலத்து.

A. வேற்றுமை அணி B. பிறிது மொழிதல் அணி C. உவமை அணி D. உருவக அணி
E. விடை தெரியவில்லை

100. “விதித்தல்” பொருளில் வரும் வியங்கோள் வினைமுற்று எந்த இடத்தில் வராது?

A. தன்மை B. முன்னிலை C. படர்க்கை D. எதுவுமில்லை E. விடை தெரியவில்லை

Padasalai.Net


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

விடைக்குறிப்பு

| S.No | Ans | S.No | Ans | S.No | Ans | S.No | Ans | S.No | Ans |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | A | 21 | B | 41 | B | 61 | A | 81 | B |
| 2 | D | 22 | D | 42 | A | 62 | B | 82 | C |
| 3 | C | 23 | A | 43 | D | 63 | B | 83 | C |
| 4 | A | 24 | D | 44 | A | 64 | C | 84 | C |
| 5 | C | 25 | C | 45 | A | 65 | B | 85 | A |
| 6 | B | 26 | C | 46 | D | 66 | B | 86 | B |
| 7 | A | 27 | A | 47 | A | 67 | C | 87 | B |
| 8 | A | 28 | C | 48 | D | 68 | D | 88 | A |
| 9 | D | 29 | C | 49 | D | 69 | D | 89 | D |
| 10 | B | 30 | C | 50 | D | 70 | D | 90 | B |
| 11 | C | 31 | A | 51 | D | 71 | D | 91 | A |
| 12 | D | 32 | A | 52 | B | 72 | D | 92 | C |
| 13 | B | 33 | B | 53 | C | 73 | B | 93 | A |
| 14 | B | 34 | C | 54 | C | 74 | A | 94 | D |
| 15 | D | 35 | C | 55 | B | 75 | B | 95 | D |
| 16 | C | 36 | A | 56 | A | 76 | D | 96 | A |
| 17 | D | 37 | B | 57 | C | 77 | B | 97 | B |
| 18 | D | 38 | A | 58 | B | 78 | D | 98 | D |
| 19 | B | 39 | C | 59 | D | 79 | D | 99 | B |
| 20 | B | 40 | A | 60 | D | 80 | C | 100 | A |

Padasalai.Net

கோ. செந்தில்குமார் எம்.ஏ., எம்.பில்., பி.எட். பட்டதாரி தமிழ் ஆசிரியர்,
அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளி, அல்லிநகரம், தேனி மாவட்டம். பேசுவதற்கு: 99420 52222

Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593